நவம்பர் 2004

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



சினிமாவுக்குப் பலகோடி!
மக்களுக்குத் தடியடி!




## வீரப்பன் இரத்தத்தால் போலீசின் பாவங்களைக் கழுவும் முயற்சி!

www.padippakam.com

# தோழர் பி.டி. இராசன் அவர்களுக்கு சிவப்பஞ்சலி!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் க.புதுப்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் விடுதலை முன்னணியின் மூத்த தோழர் பி.டி. இராசன் கடந்த 28.9.04 அன்று நெஞ்சு வலியால் மரணமடைந்து விட்டார்.

"பி.டி." என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட தோழர் இராசன், தனது இளமைக் காலத்திலிருந்தே செங்கொடி இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவர். ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)யிலும் பின்னர் அதன் திருத்தல்வாதத்தை எதிர்த்து சி.பி.எம்.-இலும் இணைந்து செயல்பட்ட அவர், நக்சல்பாரி பேரெழுச்சியைத் தொடர்ந்து சி.பி.எம்.-ஐ விட்டு வெளியேறி, நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.



"நக்சல்பாரியா?" - பேரைக் கேட்டாலே அரசு நடுங்கியது. சந்தேகப்பட்டவர்களை எல்லாம் பிடித்து இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றது. பிணத்தைக் கூட உறவினர்களுக்குத் தர மறுத்தது. அந்த நெருக்கடியான காலத்திலும், தமிழகத்தில் நக்சல்பாரி இயக்கத்தை உருவாக்கிய தியாகத் தோழர் அப்புவுடன் தொடர்பு கொண்டு, இந்த வட்டாரத்தில் கிராமம் கிராமமாக நடந்தே சென்று, புரட்சி விதையை ஊன்றிய முன்னோடி உழவன் தான், தோழர் பி.டி. இராசன்!

புரட்சியை நேசித்த இப்போராளிக்கு அரசு கொடுத்த பரிசு, சிறைவாசம்! சித்திரவதை செய்த போலீசு குண்டர்கள் தோழர் இராசனின் உறுதியை உடைக்க முடியாத ஆத்திரத்தில், அவரது பற்களை எல்லாம் உடைத்து பறித்துக் கொண்டனர். அடக்குமுறையால் துவண்டு விடாத அத்தோழர் புரட்சிக் கனலை தன் நெஞ்சிலே ஏந்தி நின்றார்; இவ்வட்டாரத்தில் வி.வி.மு. உதித்தெழுந்தவுடன் தேடி வந்து தன்னை இணைத்துக் கொண்டு ஊக்கமுடன் செயல்பட்டார்.

தோழரது மரணச் செய்தியை அறிந்தவுடன் இவ்வட்டாரத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டு, வீர வணக்க முழக்கத்துடன் சிவப்பஞ்சலி செலுத்தினர். 30.9.04 அன்று க.புதுப்பட்டி கிராமத்தில் காந்திசிலை அருகே நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தோழர்கள், தோழர் இராசனின் உயர்ந்த கம்யூனிசப் பண்புகளை நெஞ்சிலே ஏந்தி சிவப்பஞ்சலி செலுத்தினர். ம.க.இ.க. மையக் கலைக்குழு, இவ்விவசாயப் புரட்சியாளருக்கு தனது இசை நிகழ்ச்சியால் வீரவணக்கம் செலுத்தி, தோழர் இராசன் தடம் பதித்த புரட்சிப் பாதையில் அணிதிரள உழைக்கும் மக்களை அறைகூவி அழைத்தது.

தோழர் பி.டி. இராசனின் கடின உழைப்பு, எளிய வாழ்வு, விடா முயற்சி, தோழமை உணர்வு, அடக்குமுறைக்கு அஞ்சாமை - ஆகிய உயரிய கம்யூனிசப் பண்புகளை உறுதியாகப் பற்றி நிற்போம்! புரட்சிப் பாதையில் முன்னேறுவோம்!

தோழர் பி.டி. இராசன் அவர்களுக்குச் சிவப்பஞ்சலி!

- விவசாயிகள் விடுதலை முன்னணி,
உத்தமபாளையம் வட்டம்.

## மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) மதுரைக் கிளை தொடக்கவிழா

# உரிமைக் குரலெழுப்பும் புதிய உதயம்!

கடலூர், திருச்சி மாவட்டங்களில் செயல்பட்டுவரும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC), "பொடா சட்டத்தை முன் தேதியிட்டு ரத்துசெய்! பொடாவில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்!" என்ற முழக்கங்களுடன் தனது மதுரை மாவட்டக் கிளை தொடக்க விழாவை கடந்த அக்டோபர் 10-ஆம் தேதியன்று நடத்தியது. மதுரைக் கிளைத் தலைவர் நல்லகாமன், பொருளாளர் சங்கையா, செயலாளர் லயனல் அந்தோணிராஜ் மற்றும் சட்ட உதவிக்குழு உறுப்பினர்களை ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு அறிமுகம் செய்து வைக்க, மாநிலத் தலைவர் சோழர், செயலாளர் போஜகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.




மதுரை வழக்கறிஞர் சங்கத் தலைவர் வெள்ளைச்சாமி, திராவிடர் கழக சட்டத்துறை செயலாளர் மகேந்திரன், ம.க.இ.க. மாநிலச் செயற்குழு உறுப்பினர் கதிரவன், த.நா.மி.வா. பொறியாளர் சங்க மாநில அமைப்புச் செயலர் வியாகப்ப தனபாலன், மருத்துவர் சந்திரசேகர், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்க மாநில துணைப் பொதுச் செயலர் சந்திரமோகன், ம.உ.பா. மையம் மதுரை மாவட்டத் தலைவரும் மனித உரிமைப் போராளியுமாகிய நல்லகாமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பாசிச இருள் சூழ்ந்து வரும் இன்றைய நிலையில் இத்தகைய மனித உரிமை - ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்புகள் மிக அவசியமானவை என்பதையும், சுயநல - பெயர்ப்பலகை அமைப்புகளாலும், தன்னார்வக் குழுக்களால் இயக்கப்படும் அமைப்புகளாலும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்க முடியாது என்பதையும், மக்களைச் சார்ந்து நின்று மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புகளே இன்றைய தேவை என்பதையும் உணர்த்துவதாக இவ்விழா அமைந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 20

**இதழ் 1**

நவம்பர் 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.


**மகாராஷ்டிரா மாநிலத் தேர்தல் முடிவுகள்:**

# பதவி வெறியை மறைக்க மதச்சார்பின்மை முகமூடி

மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள், பா.ஜ.க. - சிவசேனா, காங்கிரசு - தேசியவாத காங்கிரசு ஆகிய இரு கூட்டணிகளுக்குமே எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

"அம்மாநிலத்தில் நடந்த பழங்குடி இனக் குழந்தைகளின் பட்டினிச் சாவுகள் (கடந்த ஏப்ரல் தொடங்கி ஆகஸ்டு முடிய - நான்கே மாதத்திற்குள் 3,231 பழங்குடி இனக் குழந்தைகள் பட்டினிக்குப் பலியாகியுள்ளன); விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள்; முத்திரைதாள் ஊழல்; தேர்தலில் நிற்கச் சீட்டு கிடைக்காததால், காங்கிரசு - தேசியவாத காங்கிரசுக் கட்சிகளைச் சேர்ந்த பெரும் புள்ளிகள் போட்டி வேட்பாளர்களாகியது - ஆகிய காங்கிரசு கூட்டணிக்குப் பாதகமான நிலைமையெல்லாம் தங்களுக்குச் சாதகமாக அமையும் எனக் கனவு கண்டது, இந்து மதவெறிக் கூட்டணி. ஆனால், அதன் நாற்காலிக் கனவு பகற்கனவாக முடிந்து போனது. சிவசேனாவின் கோட்டையாகக் கருதப்படும் மும்பய் பெருநகரைச் சேர்ந்த 34 சட்டமன்றத் தொகுதிகளில், அக்கட்சி இந்தத் தேர்தலில் வெறும் 9 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று, மூக்கை உடைத்துக் கொண்டுள்ளது. இந்து மதவெறிக் கூட்டணியின் பலம் நிறைந்த பகுதியாகக் கருதப்பட்ட கொங்கன் பிராந்தியத்தில்கூட அக்கூட்டணிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. பா.ஜ.க.வின் தலைமையை உடனடியாக மாற்றியமைக்கும் படியான அளவிற்கு, இந்தத் தேர்தல் தோல்வி இந்து மதவெறி பாசிசக் கும்பலுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

மறுபுறம், காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணிக்கும் கூட அமோக வெற்றி கிடைத்து விடவில்லை. ஆட்சி அமைக்கத் தேவையான 144 இடங்கள் கிடைக்காத நிலையில், தனக்கு எதிராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற போட்டி வேட்பாளர்களை, சுயேச்சை எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதன் மூலமாகத்தான், அக்கூட்டணி ஆட்சியை அமைத்து நடத்தப் போகிறது. அதேசமயம், ஆட்சியை அமைப்பதற்கு முன்னதாகவே இக்கூட்டணியின் பதவி வெறிப் பித்தும் பல்லைக் காட்டிவிட்டது. எந்தக் கட்சிக்கு முதலமைச்சர் பதவி என்ற போட்டா போட்டியும் சுயேச்சை எம்.எல்.ஏ.க்களைத் தத்தமது கட்சிக்கு இழுக்கும் குதிரை வியாபார பேரமும் காங்கிரசு கூட்டணிக்குள்ளேயே வெடித்து நாறுகின்றன. முதலமைச்சர் பதவியை விட்டுத்தர மறுத்து மிரட்டி வந்த சரத் பவார் கட்சிக்கு துணை முதல்வர் மற்றும் கூடுதலாக மூன்று அமைச்சர் பதவிகளைக் கொடுத்து ஒருவழியாக பேரம் பேசி முடித்திருக்கிறார்கள். காங்கிரசு கூட்டணியின் பதவி வெறியையும், அராஜகத்தையும் அம்பலப்படுத்த வக்கற்ற போலி கம்யூனிஸ்டுகளோ, இந்த அடிதடியால் மதச்சார்பின்மைக்கு ஆபத்து வந்துவிடும் எனப் பூச்சாண்டி காட்டினார்கள்.

கடந்த ஐந்தாண்டு கால காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி ஆட்சியில் முசுலீம்களுக்கு எதிராக 53 இந்து மதவெறிக் கலவரங்கள் மகாராஷ்டிராவில் நடந்துள்ளன. மும்பய்க் கலவரத்தை விசாரித்த சிறீகிருஷ்ணா கமிசனால் குற்றம் சாட்டப்பட்ட போலீசு அதிகாரிகள் இக்கூட்டணி ஆட்சியிலும் தண்டிக்கப்படவேயில்லை. இந்துமதவெறியர்களின் ஆட்சி நடக்கும் குஜராத்தைப் போலவே, மகாராஷ்டிராவிலும் "பொடா" சட்டம் முசுலீம்களுக்கு எதிராக ஏவப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக, "தலித்"தான சுஷில் குமார் ஷிண்டே முதலமைச்சராவதற்கு, பால் தாக்கரே தான் மறைமுகமாக உதவினார். இப்படி, காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி இந்து மதவெறிக்குப் பக்கபலமாக நின்றதற்குப் பல உதாரணங்களைத் தரலாம்.

தேர்தல் அரசியலுக்கு வெளியே நின்று, இந்து மதவெறிக்கும், தாராளமயத்திற்கும் எதிராக மக்களைத் திரட்டிப் போராடக் கூடிய புரட்சிகர சக்திகள் பலவீனமாக இருக்கும் நிலையில், இலவச மின்சாரம், விவசாயக் கடனுக்கான வட்டி ரத்து போன்ற சில்லறை சீர்திருத்தங்களையும், இந்து மதவெறிக் கும்பலுக்கு எதிராக வெற்றுச் சவடால்களையும் அள்ளிவிட்டுதான் காங்கிரசு கூட்டணி இந்த அளவுக்காகவாவது தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. இது ஒருபுறமிருக்க, மகாராஷ்டிராவில் தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 288 சட்டமன்ற உறுப்பினர்களுள், 92 பேர் பெரும் கோடீசுவரர்கள். இவர்களுள் பலர் அரசு புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போடும் ரியல் எஸ்டேட் அதிபர்கள். இந்தப் பண முதலைகள் காங்கிரசு, தேசியவாத காங்கிரசு, பா.ஜ.க., சிவசேனா என நீக்கமற ஆளுங்கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் பரவிக் கிடக்கிறார்கள். எனவே, அடுத்த ஐந்து வருடங்களுக்கு மகாராஷ்டிராவில் நடக்கப் போவது பதவி வெறியர்கள் - நில முதலைகளின் ஆட்சிதான். இந்த மக்கள் விரோதக் கும்பலை மூடிமறைக்க, மதச்சார்பின்மை ஒரு முகமூடியாகப் பயன்படுத்தப்படும்! ●

www.padippakam.com

# வீரப்பன் இரத்தத்தால் போலீசின் பாவங்களை கழுவும் முயற்சி

**ச**த்தியமங்கலம் - கொள்ளேகால் மலைப்பகுதியிலிருந்து சந்தனமரங்களை வெட்டிக் கடத்தியது, யானைகளைக் கொன்று தந்தங்களைக் கடத்தியது, பிரபல ஆட்களைக் கடத்திப் பணம் பறித்தது, நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கொன்றது உட்பட பல்வேறு குற்ற வழக்குகளுக்காகத் தேடப்பட்டு வந்த வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகள் மூவரையும் மிகவும் கோழைத்தனமான, அவமானகரமான, குரூரமான, சட்ட விரோதக் கிரிமினல் முறையில் தமிழகப் போலீசின் சிறப்பு அதிரடிப் படை படுகொலை செய்துள்ளது. போலீசுக்குச் சேவகம் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கும் செய்தி ஊடகம் மூலமாக யாருமே நம்ப முடியாத கட்டுக்கதைகளைப் பரப்பியும் வருகிறது.

வீரப்பன் மற்றும் அவருடைய கூட்டாளிகளைக் கொலை செய்ததை பார்ப்பன-பாசிச பயங்கரவாதி ஜெயலலிதாவும் அவருடைய செல்லப் பிராணிகளான போலீசும் பட்டாசு வெடித்தும், விருந்து, குடி - கூத்துகள் நடத்தியும், மொட்டை போட்டும், பாதயாத்திரை நடத்தியும் மிகமிக அருவெறுக்கத்தக்க, வக்கிரமான முறையில் கொண்டாடுகின்றனர். எம்.ஜி.ஆர்., ராஜீவ் காந்தி, கோவைக் குண்டு வெடிப்புப் பிணங்கள் என்று சாவை வைத்து அரசியல் நடத்தி ருசிகண்ட ஜெயலலிதா கும்பல், இப்போது வீரப்பன் மற்றும் அவரது கூட்டாளிகளின் பிணங்களைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவதற்கு எத்தணிக்கிறது. அவர்களின் இரத்தத்தால் தமது பாவங்களைக் கழுவிக் கொள்வதற்கு பாசிச ஜெயலலிதா கும்பலும் போலீசும் கடும் முயற்சிகள் செய்கின்றனர்.

''வீரப்பனைக் கடிச்சே கொன்னுடலாம்னு' எனக்குள்ளே இருந்த அந்த வெறி அவன் செத்து மடிஞ்சு கிடந்த காட்சியைப் பார்த்த பின்னாடிதான் தணிந்தது'' என்று வீரப்பன் கூட்டத்துக்குள் மாறுவேடத்தில் ஊடுருவியதாகக் கூறப்படும் போலீசு ஆய்வாளர் வெள்ளைத்துரை பேட்டியளித்துள்ளார். போலீசிடம் நிலவும் சட்டவிரோதகக் கிரிமினல் வெறிக்கு இதைவிட வேறு என்ன சாட்சியம் வேண்டும்! வீரப்பன் கூட்டத்தைக் கொன்று போடுவது என்பதைக் கடந்த செப்டம்பர் மாதத்திலேயே புது டில்லியில் மைய அரசு அதிகாரிகளோடு சேர்ந்து திட்டமிட்டு, கொல்லப்படுவதற்கு ஒரு வாரம் முன்பாக இறுதி முடிவு செய்ததாகக் கர்நாடக முதல்வர் கூறியிருக்கிறார். வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து சிறப்பு அதிரடிப் படை கூறும் விளக்கங்களில் ஏராளமான முரண்பாடுகள் உள்ளன.

ஏற்கெனவே இரண்டு முறை வீரப்பனை கண் மருத்துவச் சிகிச்சைக்கு அழைத்துவந்த அவரது உதவியாளரே கொடுத்த தகவல்படி, சிறப்பு அதிரடிப் படை வழிமறித்தபோது நிகழ்ந்த மோதலில் அவர்கள் கொல்லப்பட்டதாக முதலில் சொன்னார்கள். போலீசு உளவாளிகள், விடுதலைப் புலிகளின் தூதர்கள் என்ற மாறுவேடத்தில் வீரப்பன் கூட்டத்தில் ஊடுருவி, அவருக்குக் கண் சிகிச்சை அளிக்கவும் தஞ்சம் அடையவும் ஈழத்துக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி தாமே தயார் செய்த அவசர மருத்துவ உதவி வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வந்து ''என்கவுண்டர்'' செய்து விட்டதாக இப்போது கூறுகிறார்கள். வீரப்பனை உயிரோடு பிடிப்பதுதான் தங்கள் நோக்கம்; ஆனால் அதிரடிப் படை அவனை சுற்றி வளைத்து முற்றுகையிட்டு, சரணடையும் படி அறிவித்தவுடன் வீரப்பன் கூட்டத்தினர் சுடத் தொடங்கி விட்டனர். அதிரடிப்படையினர் வேறு வழியின்றி திருப்பிச் சுட்டதில் அவர்கள் இறந்துவிட்டனர்; நடந்த மோதலில் ஒரு எஸ்.பி. உட்பட மூன்று போலீசு அதிகாரிகள் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது முதலில் சொன்ன கதை. வீரப்பன் கும்பல் சுட்டதில் காயமடைந்ததாகக் கூறப்பட்ட போலீசு அதிகாரிகள் யார் யார், இப்போது அவர்கள் எங்கே என்பது பற்றி இப்போது பேச்சேயில்லை. காரணம், வீரப்பன் கும்பல் சுடவே இல்லை என்பது தெரிகிறது. பிறகு, செய்தி ஊடகம் மூலம் தமக்கு ஆதரவு பெருகிவிட்டதாகக் கருதும் அதிரடிப் படை, தானே வீரப்பன் கூட்டத்தினர் இருந்த வாகனத்துக்குள் வெடிகுண்டு வீசியதும் எழுந்த புகை மூட்டத்துக்குள் எதிரிகள் திணறிக் கொண்டு இருக்கையில், 60 அதிரடிப்படையினர் சூழ்ந்து கொண்டு தமது தலைவர் விஜயகுமார் ஆணையிட சரமாரியாகச் சுட்டுக் கொன்றுவிட்டதாக இப்போது கூறுகின்றனர்.

''என்கவுண்டர்''

பூச்செண்டுக்குப் பதிலாக, வீரப்பன் தலையைக் கொய்து வந்து கொடுத்திருந்தால், ஜெயா இதைவிட மகிழ்ச்சி அடைந்திருப்பாரோ!






படிப்பகம்

www.padippakam.com

கொலைகள் செய்வதில் "திறமைசாலி"யாகிவிட்ட எஸ்.ஐ. வெள்ளைத்துரை, சென்னையில் பணியாற்றிக் கொண்டே தனக்கு உடனடி மேலதிகாரிகளுக்கும் தெரியாமல் அவ்வப்போது சத்தியமங்கலம் சென்று அதிரடிப்படைப் பயிற்சி பெற்றதாகவும், புலிப்படையைச் சேர்ந்த ஈழத்துக்காரன் என்று கூறி வீரப்பனை நம்ப வைத்து வீரப்பன் கூட்டத்தை வெளியே கொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள். இந்த வெள்ளைத்துரை வீரப்பனை இரண்டு முறைதான் சந்தித்திருக்கிறார். வெள்ளைத்துரையினுடான முதல் சந்திப்பிலேயே அவர் புலிகளின் தூதர், கண் சிகிச்சைக்காகவும், தஞ்சமடையவும் ஈழத்துக்கு அழைத்துப் போவார் என்பதை வீரப்பன் நம்பிவிட்டார்; வெள்ளைத்துரையுடனான, இரண்டாம் சந்திப்பிலேயே வீரப்பன் தன் கூட்டாளிகளுடன் கிளம்பி விட்டார் என்று கூறுவது யாரும் நம்பக்கூடியவைகளாக இல்லை. வீரப்பன் கும்பல் வந்த வாகனத்தில் இருந்து குதித்து ஓடுவதற்கு முன்பு, வெள்ளைத்துரை ஒரு வெடிகுண்டை வீரப்பன் காலடியில் வீசி வெடிக்கச் செய்தார் என்று முதலில் சொன்னார்; இப்போது அதிரடிப்படை சுடத் தொடங்கும் முன்பு, வெடிகுண்டு வீசி புகையெழுப்பியதாகச் சொல்கிறார்கள். அந்த வாகனத்தில் நவீன "காமிரா" வைக்கப்பட்டு அதிரடிப்படைத் தலைவர் கண்காணிப்பு செய்ததாகக் கூறுகின்றனர். ஆனால், வீரப்பன் கும்பல் வேனில் இருந்தபோதுதான் "என்கவுண்டர்" நடந்தது என்பதற்கான புகைப்பட ஆதாரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. குறைந்தது "என்கவுண்டருக்கு"ப் பிறகு வீரப்பன் கும்பல் அந்த வாகனத்துக்குள் இரத்தம் சிந்திச் செத்துக் கிடக்கும் புகைப்படங்கள் கூட இல்லை. வாகனத்தின் வெளியே குண்டுகள் துளைத்த அடையாளங்கள் மட்டுமே காட்டப்படுகின்றன.



28.1.2000 அன்று கோபிச்செட்டிப் பாளையத்தில் நடந்த சதாசிவம் கமிசன் விசாரணையின் பொழுது, அதிரடிப்படை செய்த சித்திரவதையால் எழுந்து நடமாட முடியாதபடி முடமாகிப் போன கரியன், படுத்தபடியே சாட்சியமளிக்கிறார்.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக அறிவிப்பு செய்தது, போலீசு. ஆனால், அப்படிச் செய்யவே இல்லை. அவற்றை உடனடியாக எரித்து விடும்படி நிர்பந்தித்த போலீசு, வேனிலிருந்து இறக்காமலேயே தானே சிதையில் வைத்து எரிக்கச் செய்தது; வீரப்பன் குடும்பத்தினரின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு புதைக்கச் சம்மதித்து, தானே குழியில் போட்டுவிட்டு, குழியை மூடும்வரை காத்திருந்து உறுதி செய்து கொண்டது. கொல்லப்பட்டவர்களின் உடல்களை யாருமே முழுவதுமாகப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக, வெள்ளைத் துணியில் மூடிக் கட்டியிருந்தது; குல வழக்கப்படி உடல்களுக்குக் குளிப்பாட்டி சடங்குகள் செய்வதற்குக் கூட அனுமதிக்கப்படவே இல்லை. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, "வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் போலீசுடனான மோதலில் கொல்லப்படவில்லை; முன்பாவே உயிருடன் பிடித்து சித்திரவதை செய்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும். அவர்களின் பிணங்களை வேனில் ஏற்றிக் கொண்டு வந்து அதிரடிப்படையினர் 'என்கவுண்டர்' நாடகமாடுகிறார்கள்" என்று வீரப்பன் உறவினர்களும், மனித உரிமைகள் அமைப்பினரும் பொது மக்களும் கருதுவதுதான் நம்பக் கூடியதாக உள்ளது.

வீரப்பனையும் அவரது கூட்டாளிகளையும் உயிரோடு பிடிப்பது தமிழக - கர்நாடக அதிரடிப்படைகளின் நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. அவர்களைக் கொன்று விடுவதையே நோக்கமாகக் கொண்டு அலைந்தார்கள். தற்போதைய தமிழக அதிரடிப் படைத் தலைவர் விஜயகுமாரின் முன்னோடியான இரத்தவெறி பிடித்த தேவாரம், "வீரப்பன் கோர்ட்டில் சரணடைந்தால், அவனைச் சுட்டுக் கொல்வேன்" என்று பகிரங்கமாகவே கூறிக் கொண்டு திரிந்ததே இதற்கு ஆதாரமாக உள்ளது. எனவேதான், போலியான மோதல் கொலைகளைச் செய்வதில்



**சோளகர் தொட்டி**
- ச. பாலமுருகன்
வனம் வெளியீடு,
17, பாவடித் தெரு,
பவானி - 638 301;
பக்கங்கள்: 240;
விலை: ரூ. 100/-

***வீரப்பனின் உளவாளிகள், உதவியாளர்கள் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்கள் சித்திரவதைகள் செய்து கொல்லப்பட்டனர்; பெண்கள் மிருகத்தனமான சித்திரவதைகள் செய்யப்பட்டு, பாலியல் வன்முறைக்குப் பலியாயினர். சமீபத்தில் வெளிவந்த "சோளகர் தொட்டி" என்ற நூல் இவைபற்றிய கதைகளைக் கூறுகின்றது.***


படிப்பகம்

வல்லவரான வெள்ளைத்துரை - அதிரடிப்படையில் பங்கு பெறாதவர் என்றாலும் இப்பணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். வீரப்பனையும் அவரது கூட்டாளிகளையும் உயிரோடு பிடித்து வந்தோ, அவர்கள் சரணடைந்தோ வழக்கு மன்றத்துக்கு முன்பு வந்தால், அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களில் சம்பந்தப்பட்ட போலீசு - வனத்துறை அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், கடத்தல் வியாபாரிகள் என்று இன்று சமூகத்தில் சுதந்திரமாக நெஞ்சு நிமிர்ந்து உலவும் பல பெரிய மனிதர்கள் சிக்குவர் என்று ஆட்சியாளர்கள் அஞ்சினர். இது எப்போதுமே பகிரங்கமான உண்மையாக இருந்து வந்திருக்கிறது. வீரப்பனோடு சேர்த்து பல இரகசியங்கள் புதைக்கப்பட்டு விட்டன என்று விமர்சனப் பார்வையுடைய பத்திரிக்கையாளர்களே எழுதுகின்றனர்.

வீரப்பனையும் அவரது கூட்டாளிகளையும் கொன்றது, உலகமே வியக்கும் சாதனை என்று ஊதிப் பெருக்கி பிரச்சாரம் செய்யும் போலீசு, மலைவாழ் மக்களின் கொடூரனாக அவர் இருந்தார் என்றும், இனி அவர்கள் நிம்மதியாக வாழலாம் என்றும் பசப்புகின்றனர். மலைவாழ் மக்கள் மட்டுமல்ல, மலைகளைச் சூழ்ந்துள்ள மாவட்டங்களில் வாழும் மக்கள் கூட வீரப்பனுக்காக அனுதாபப்படுவதும், தமிழகப் போலீசு மீது ஆத்திரம் கொள்வதும்தான் இருக்கிறது. வீரப்பன் கூட்டத்தைத் தேடிப் பிடிப்பதற்காக 50 கோடி செலவிட்டதாகக் கூறும் ஜெயலலிதா அரசு, அவர்களைக் கொலை செய்ததற்காக 50 கோடி ரூபாயும், பதவி உயர்வும், வீட்டுமனையும், குடும்பத்தோடு விருந்தும் விழாவும் பாராட்டுமாகக் கூத்தடிக்கிறது. ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த உரிமைகள் - ஊதியங்களைப் பறிப்பதற்கு எதிராகப் போராடிய அரசு ஊழியர்களை இரும்புக் கரங்கொண்டு ஒடுக்கிய ஜெயலலிதா கும்பல், தனது செல்லப் பிராணிகளான போலீசுக்குக் கேட்காமலேயே ஏராளமான வசதிகளை - ஊக்குவிப்புகளை வாரி இறைத்து வந்தது. இப்போது, சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களைப் பிடித்த - சுட்டுக் கொன்ற போலீசுக்குக் கூட தரப்படாத அளவுக்கு, தமிழக - கர்நாடக அதிரடிப் படையினர் பரிசு மழையில் குளிப்பாட்டப்படுகின்றனர்.

அதேசமயம், அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளைப் போல இரு மாநில அதிரடிப்படைகள் வீரப்பன் கூட்டம் நடமாடிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு எதிராகப் புரிந்த அட்டூழியங்கள் வீரப்பனோடு சேர்த்துப் புதைக்கப்பட்டு விட்டன. வீரப்பனின் உளவாளிகள், உதவியாளர்கள் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான மலைவாழ் மக்கள் சித்திரவதைகள் செய்து கொல்லப்பட்டனர்; உடல் ஊனமாக்கப்பட்டனர், கொடிய சட்டங்களின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர்; பெண்கள் தங்கள் இரத்த உறவினர்கள் கண் முன்பாக மிருகத்தனமான சித்திரவதைகள் செய்யப்பட்டு, பாலியல் வன்முறைக்குப் பலியாயினர். மனித உரிமைச் செயல்பாடுகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட ச. பாலமுருகன் என்பவர் எழுதி சமீபத்தில் வெளிவந்த ''சோளகர் தொட்டி'' என்ற நூல் இவைபற்றிய கதைகளைக் கூறுகின்றது. மலைவாழ் மக்களுக்கு எதிரான இந்த அட்டூழியங்களை விசாரித்த சதாசிவம் ஆணையம் மற்றும் நரசிம்மன் குழு அறிக்கைகளை இரு மாநில அரசுகளும் வெளியிட மறுப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடாக ஒதுக்கப்பட்ட ஐந்து கோடி ரூபாயும், பகிர்ந்தளிக்காமல் முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது.



பட உதவி: இந்தியா டுடே

**சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளையர்களைப் பிடித்த - சுட்டுக் கொன்ற போலீசுக்குக் கூட தரப்படாத அளவுக்கு, தமிழக - கர்நாடக அதிரடிப் படையினர் பரிசு மழையில் குளிப்பாட்டப்படுகின்றனர்**

நாட்டிலேயே மிக மோசமான முதலமைச்சர் என்ற ஜெயலலிதாவும், மிகப் பெரிய கிரிமினல் குற்றங்கள் மலிந்த சீருடை அமைப்பு என்று தமிழகப் போலீசும் பெயர் பெற்றிருக்கின்றனர். போராடும் மக்களை ஒடுக்குவதிலும், அரசியல் எதிரிகளை மட்டுமல்ல - சுதாகரன் முதல் செரினா வரை ஆளும் கும்பலின் நெருங்கிய நிழல் பேர்வழிகளையும் பழிவாங்குவதில் ஜெயலலிதாவுக்கு விசுவாசமாகச் செயல்பட்டு வருகிறது தமிழக போலீசு. அதேபோல கொட்டடி சித்திரவதைகள், படுகொலைகள் மற்றும் பாலியல் வன்முறைகளில் கணக்கின்றி ஈடுபடுவதோடு டி.ஜி.பி., கமிசனர், எஸ்.பி. என்று அதி உயர் போலீசு முதல் சாதாரண போலீசு வரை இலஞ்ச ஊழல், கொலை, வழிப்பறி, பாலியல் வன்முறை என்று ஆயிரக் கணக்கில் கிரிமினல் குற்றங்கள் புரிவது வரை அனைத்துக்கும் போலீசுக் கிரிமினல்களைக் காத்து வருகிறார் ஜெயலலிதா. கடைசியாக, போலீசுத் துறையின் ஒரு பெரும் பிரிவே சிவகாசி ஜெயலட்சுமி விவகாரத்தில் சிக்கி நாடு முழுவதும் நாற்றமடிக்கிறது. இவற்றால் ஏற்பட்ட கறைகளையும், பாவங்களையும் கழுவிக் கொள்வதற்காக, வீரப்பன் கூட்டத்தை அழித்து சாதனை நிகழ்த்திவிட்டதாகத் தொடர்ந்து ஜெயலலிதாவும் போலீசும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதே நோக்கத்தோடு ஒரு அரசியல்வாதியைப் போல அதிரடிப்படைத் தலைவர் விஜயகுமார் பன்னாரி கோவிலில் இருந்து பாதயாத்திரை நடத்துகிறார். இதைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் அரசியல் வாரிசாகக் கூட இந்த விஜயகுமார் முன்நிறுத்தப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

வீரப்பன் 'என்கவுண்டர்' சாதனையைக் காட்டிப் பிரச்சாரம் செய்து, அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு, தமிழக சட்டமன்றத்துக்கான தேர்தலை முன்தள்ளிப் போட்டு ஆதாயமடையலாம் என்று ஜெயலலிதா கும்பல் திட்டமிடுகிறது. அதைவிட முக்கியமாக, சமூக விரோதி, தீவிரவாதி, பயங்கரவாதி என்று யாரையெல்லாம் ஜெயலலிதாவும் போலீசும் முத்திரை குத்துகிறார்களோ அவர்களை, சட்டத்தின் முன்பும் வழக்கு மன்றத்தின் முன்பும் நிறுத்தவேண்டியதில்லை; என்கவுண்டர் என்ற பெயரில் நேரடியாகவே கொன்று விடலாம் என்பதை சட்டத்திற்கு அப்பாற்பட்ட விதியாகவும் உரிமையாகவும் ஜெயலலிதா - விஜயகுமார் கூட்டணி உருவாக்கியிருக்கிறது. இந்த விதியை, உரிமையைக் கேள்விக்கிடமின்றி விரிவுபடுத்தவும், அதற்காக வெள்ளைத்துரை போன்றவர்களை வைத்து ''என்கவுண்டர்'' சிறப்புப் படையைக் கட்டி எழுப்பவும் விழைந்திருக்கிறது. இதுதான் வீரப்பன் ''என்கவுண்டர்'' விவகாரம் தரும் மிகமிக முக்கியமான செய்தி!

● ஆர்.கே.

www.padippakam.com

## இராமேசுவரம் மீனவர் வாழ்க்கை:

# தொழிலுக்கு உத்திரவாதமில்லை உயிருக்குப் பாதுகாப்பில்லை

"எங்களை இலங்கை பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நாட்டிலேயே இருந்து மீன்பிடித்து பிழைத்துக் கொள்கிறோம் என்று போராடும் அளவிற்கு நாங்கள் வாழ்க்கையின் அவலத்தில் தள்ளப்பட்டு விட்டோம்'' என்று கண்ணீரோடு கதறுகிறார்கள், ராமேசுவரம் மீனவர்கள். மீன்பிடி தொழிலில் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புக் கோரி கடந்த ஒரு மாத காலமாக அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி ராமேசுவரம் மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்குச் சென்றனர். ஆனால், பல நாட்கள் கடந்த பிறகும் கடலுக்குள் சென்றவர்கள் கரை திரும்பவில்லை. காரணம், தங்கள் கடல் எல்லைக்குள் அத்துமீறி புகுந்ததாக இலங்கைக் கடற்படை அவர்களைச் சிறை பிடித்துக் கொண்டது. மீனவர் சங்கங்களின் பல முயற்சிகளுக்குப் பிறகும் மீனவர்களை இலங்கை கடற்படையிடமிருந்து மீட்க முடியவில்லை.

தங்களது உயிராதாரமான பிரச்சினையைக் காது கொடுத்து கேட்காமல் தமிழக அரசு தொடர்ந்து அலட்சியம் செய்வதால், தமிழக மீனவர்கள் வெள்ளைக் கொடி கட்டிக் கொண்டு 10 ஆயிரம் விசைப்படகுகளில் இலங்கைக்கு அகதிகளாகச் செல்லும் போராட்டத்தை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடல்பரப்பான பாக் ஜலசந்திப் பகுதியில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு பலியாவதும் கைதாவதும் பெருகிக் கொண்டே போகிறது. 1971-ஆம் ஆண்டு பாகிஸ்தானை ஆத்திரமூட்டி போருக்கு இழுத்து வங்கதேசத்தை உருவாக்கியதுபோல, 1974-ஆம் ஆண்டு இலங்கைக்கு குண்டுக்குப் பதில் கச்சத்தீவைப் பரிசாக வழங்கி தனது பிராந்திய மேலாதிக்கத்தை விரிவுபடுத்தியது பாசிச இந்திரா அரசு. அப்போது நாடாளுமன்றத்தில் 22 உறுப்பினர்களைக் கொண்டிருந்த, தமிழகத்திலும் ஆட்சியில் இருந்த தி.மு.க., இந்திராவின் தானத்தை வேடிக்கைதான் பார்த்தது.

இலங்கைக்கு கச்சத் தீவை வழங்கியதன் மூலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருந்த குறிப்பான கடல் எல்லையை அழித்தது இந்திய அரசு. இந்நடவடிக்கையால் கடல் மீனைப் போலவே மீனவர்களும் எல்லை தெரியாமல் குழம்பிப் போகின்றனர். மேலும், இறால் மீன் காலங்களில் தொழில் போட்டி அதிகரிப்பதால் எல்லையை மீறித் தொழில் செய்யும் நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர். இதை இலங்கை தமிழர்களுக்கும் இந்திய தமிழர்களுக்கும் இடையேயான போட்டியாக்கி இலங்கை அரசு குளிர் காய்கிறது. இதுவரை இலங்கை அரசால் 100-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் நடுகடலிலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 500-க்கும் மேற்பட்டவர்கள் உடல் ஊனமாகி விட்டனர். 100-க்கும் மேற்பட்டோர் படகுகளை இழந்துள்ளனர்.

தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமை இழப்புக்கும் அதி முக்கிய காரணம் இந்திய கடற்படை ஆகும். ஏறக்குறைய 4000 கிலோ மீட்டர் நீள கடல் எல்லையை கையாளும் இந்திய கடற்படை வெறும் 100 கிலோமீட்டர் நீளமுள்ள தமிழக மீனவர்களின் தொழில்பரப்பை பாதுகாக்கவும் வக்கற்றுத் திரிகிறது.

''தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி போவதால்தான் சுடப்படுகிறார்கள்'' என தமிழக மீனவர்களின் மீதே முழுப் பழியையும் போட்டு வந்த இந்தியக் கடற்படை, இப்பொழுது, ''இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குவதில்லை; தாக்குதல் நடத்துவது விடுதலைப் புலிகள்தான்'' (பார்க்க - துக்ளக் 6.10.2004, பக்:14) என்ற கதையை அவிழ்த்துவிட்டு, இலங்கை கடற்படையைக் கொலைப் பழியில் இருந்து காப்பாற்றும் பொறுப்பையும் தன் தலைமேல் போட்டுக் கொண்டுள்ளது.

அதுமட்டுமல்ல; தம் பங்குக்கும் தமிழக மீனவர்களை வேட்டையாடுகிறது, இந்தியக் கடற்படை. விடுதலைப் புலிகளுக்காக கடத்தல் வேலை செய்கிறார்கள், ஆயுதங்களைக் கடத்துகிறார்கள், எரிபொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்கிறார்கள் என்று தமிழக மீனவர்களை பிடித்துச் சென்று விசாரணை என்ற பெயரில் அவர்களின் மீன்பிடித் தொழிலை முடக்குகிறது. பல நேரங்களில் மிரட்டல் மற்றும் சித்திரவதைகளில் ஈடுபடுகிறது.

இறால், மீன், நண்டு என மீனவர்களால் சேகரிக்கப்படும் கடல் வளங்களை ஏற்றுமதி செய்து பலநூறு கோடி ரூபாய் டாலர்களை அந்நிய செலாவணியாகப் பெறுகிறது, இந்திய அரசு. ஆனால், அந்த மீனவர்களின் உயிருக்குப் பாதுகாப்புத் தர வக்கற்று கையை விரிக்கிறது. ஆனால், வங்கிகளில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை கடனாகப் பெற்று ஏமாற்றும் முதலாளிகளை மட்டும் தொழில் பாதுகாப்பு படை மூலம் பாதுகாக்கிறது! இதுவா மக்களுக்கான அரசு?

**இராமேசுவரம் மீனவர்கள் நடத்தும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தால் கரையில் சோம்பி நிற்கும் படகுகள்.**



● குணசேகரன்


படிப்பகம

# சினிமாவுக்குப் பலகோடி! உழைப்போருக்குத் தடியடி!

திருட்டு வீ.சி.டி. என்ற கொடூர வில்லனிடமிருந்து தமிழ் சினிமாவை மீட்க 'அம்மா' அம்மனாக விசுவரூபம் எடுத்த இறுதிக் காட்சியை தமிழ் சினிமா ரசிகர்கள் எதிர்பார்க்கவில்லை. திடீரென கதைக்கு ஒட்டாமல் 'பிட்டு'ப் படம் ஓடுவது போல் அம்மன் வந்து போனது 'அறிவாளி' ரசிகர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் சினிமாவின் 'பிரம்மாக்கள்' என்று வலம் வரும் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், நடிகர்கள் என்ற கும்பல், திருட்டு வீ.சி.டி. என்ற கொடூர வில்லனைவிடக் கேடுகெட்ட கழிசடைகள் தான் என்பது 'தரை டிக்கெட்' ரசிகர்களுக்குக் கூட அரசல்புரசலாகத் தெரியும்.

இப்படிப்பட்ட ஒட்டுண்ணி தமிழ் திரையுலகை காப்பாற்றுவதற்குத்தான் தமிழக முதல்வர் ஜெயலலிதா திருட்டு வீ.சி.டி. கும்பலுக்கு எதிராக அரசு அதிகாரத்தை ஏந்திச் சுழற்றுகிறார்.

திருட்டு வீ.சி.டி. தொழிலில் ஈடுபடுவோரைக் குண்டர் சட்டத்தின் கீழ் சிறையிலடைப்பது, மேலும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூபாய் 2 இலட்சம் அபராதம், திருட்டு வீடியோ திரைப் படங்களைக் காட்டும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம், 3 ஆண்டுகள் சிறை என்ற இரட்டை தண்டனை, திருட்டு வீ.சி.டி. குற்றவாளிகளை விரைந்து தண்டிப்பதற்கு 10-க்கும் மேற்பட்ட வீடியோ திருட்டுத் தடுப்பு சிறப்பு பிரிவுகளையும் உருவாக்கியிருக்கிறார்.

கள்ளச் சாராயம், கலப்படம், போலி மருந்து தயாரிப்பவர்கள், இயற்கை வளங்களைச் சூறையாடும் கிரிமினல்கள், அரசு நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் விபச்சாரம் போன்ற குற்றங்களுக்கு இணையான குற்றமாக இனி திருட்டு வீ.சி.டி. தொழில் கருதப்படும் என்று அரசு அறிவிப்பு வெளியிட்ட 24 மணி நேரத்தில் தமிழகத்தின் அனைத்து வீ.சி.டி. கடைகளும் போலீசால் சூறையாடப்பட்டன.

இதுமட்டுமல்ல; திரைப்படத் தொழிலுக்கு ஊக்கமும் உத்வேகமும் அளிக்கும் விதத்தில் வரி விதிப்பு முறையில் பெரிய மாற்றங்களை செய்துள்ளது, பாசிச ஜெயா அரசு.

தமிழகத்திலுள்ள 3500-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் பாதிக்கும் மேற்பட்ட திரையரங்குகள் தற்போது வரி விலக்கு திரையரங்குகளாக மாற்றப்பட்டுள்ளது! அதாவது, இதுநாள் வரையில் புறநகர் மற்றும் கிராமப்புற திரையரங்குகளில் இருக்கைகளின் எண்ணிக்கை அடிப்படையில் வரிவிதிக்கப்பட்டது (Compound Tax). இனிமேல், 'இத்தனைப் பேர்தான் படம் பார்த்தார்கள்' என்று திரையரங்க உரிமையாளர்கள் சொல்லும் கணக்குக்கு மட்டும்தான் வரி! அதுவும் 10 சதவிகிதம்.

நகர்ப்புற திரையரங்குகளுக்கும் இதே அளவுதான் இனி வரி! புதுப்படம் வெளியிடும்போது மட்டும் அவர்கள் கூடுதலாக 5 சதவிகிதம் வரி செலுத்த வேண்டும்! மேலும் பார்வையாளர்களிடம் ஒவ்வொருமுறையும் 'பராமரிப்பு' செலவு என்று பணம் வசூலித்துக் கொள்ளும் உரிமையும் திரையரங்குகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, வாகனங்களை நிறுத்துவதற்கு 'பார்க்கிங்' வசதிக்குப் பணம் பிடுங்குவதுபோல் பராமரிப்பு வசதிக்கு என்று தனியாக வசூல் வேட்டை நடத்தலாம். தமிழ்த் திரையுலகை வாழ வைக்க, திரைப்படம் பார்க்க வரும் தமிழர்களின் தாலியை அறுக்கச் சொல்லி அனுமதி கொடுத்திருக்கிறார், 'அம்மா'!

ஏவிஎம், பிரசாத் மற்றும் விஜயா வாகினி போன்ற 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்கள் உள்ள திரைப்பட நிறுவனங்கள் உள்பட திரைப்படம் சம்பந்தமான அனைத்து நிறுவனங்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு வரிவிடுமுறை விடப்பட்டுள்ளது. திரைப்படச் சாதனங்களை குத்தகை விடுவதற்கு அரசு வசூலித்த 12 சதவிகித விற்பனை வரி இனி இல்லை!

அரசுக்குச் சொந்தமான வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், கட்டிடங்கள் மற்றும் 'ஊட்டி' போன்ற இயற்கை அழகு பிரதேசங்கள் இனி சினிமா படப்பிடிப்புக்கு மலிவான வாடகைக்கு விடப்படும். அதாவது பொதுமக்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகள் கூட சினிமா கும்பலுக்குத் தடையின்றித் திறந்து விடப்படும்.

மேலும், இன்னொரு அநியாயமும் அரங்கேறியுள்ளது. திரைப்பட நகரம் என்ற பெயரில் புதிய கனவுலகத்தை நிர்மாணிப்பதற்கு பலநூறு ஏக்கர் அரசு நிலத்தை இலவசமாக கொடுப்பதற்கு திரைமறைவு வேலைகள் நடக்கின்றன.

கள்ளச் சாராயம், மணல் திருட்டு, சந்தன மரக் கடத்தல் கும்பல்கள் போல் திரைப்பட முதலாளிகள் கும்பலும் இனி தமிழகத்தைச் சூறையாடலாம் என்று பாசிச ஜெயா பச்சைக்கொடி காட்டி விட்டார்! அரசிடமிருந்து இவ்வளவு சலுகைகளையும் விருதுகளையும் பெறுவதற்கு சினிமா கும்பலுக்கு உள்ள சமூக தகுதிதான் என்ன?

பொழுது விடிந்து வானொலி - வானொளியை திறந்தால் சாக்கடையின் மூடியை திறந்தது மாதிரி குடலைப் புரட்டுகிறது.

கதாநாயகிகள் என்ற பெயரில் பவுடர் அப்பிய குரங்குகள், தாங்கள் நடித்து முன்னேறி வந்த கஷ்டத்தை குட்டியானைகள் போல் பிளிறுகின்றன. அதிலிருந்து தப்பித்து வீட்டை விட்டு வெளியில் வந்தால் சாலை ஓரச் சுவர்களில் இருக்கும் சினிமா சுவரொட்டிகள் திறந்தவெளி படுக்கையறை, குளியலறையாக நாறுகின்றன. சாலை நீளத்துக்கு இருக்கும் சினிமா சுவரொட்டிகளில் கதாநாயகன் என்ற கிழடுகள் பவுடர் பூசிக் கொண்டு கசாப்பு கடையின் ஈக்கள் போல் கதாநாயகிகள் என்ற சதைப் பிண்டங்கள் மீது ஊர்ந்தும் மோந்தும் படுத்தும் கிடக்கிறார்கள்.

சினிமா கழிசடைகளின் ஆபாச வக்கிரம் இதோடு முடிவதில்லை! முடிவேயில்லாமல் நீளுகிறது. சினிமாவின் தலைப்பில் ஆரம்பித்து பாடல்கள், கதை, வசனம், காட்சிகள் மற்றும் பட

www.padippakam.com

விளம்பரங்கள் வரை அனைத்திலும் ஆபாசமும் வக்கிரமும் பரவிக் கிடக்கிறது.

சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், பெரியவர்கள் என்று தமிழக மக்களின் எந்தப் பிரிவினரும் இந்த தமிழ் சினிமாவின் நச்சுக்கழிவின் தாக்குதலிலிருந்து தப்பிக்க முடிவதில்லை. அனைத்து புலனுறுப்புகளின் வழியாகவும் புகுந்து அவர்களின் மூளையைத் தாக்குகிறது. அடுக்கடுக்காக அவர்களின் மூளையில் தேங்கிப் போன தமிழ் சினிமாவின் கழிசடைக் கருத்துக்கள், டப்பிங் பட கதாநாயகர்கள், கதாநாயகிகள் போல் அவர்களை மாற்றி நடமாட விடுகின்றன. பிறகு, இந்த சினிமா ரசிகர்களையே மலிவுவிலை தேர்தல் வாகனமாக மாற்றித் தங்களது கனவுலக முதல்வர் நாற்காலி பதவியைப் பிடிக்கத் துடிக்கின்றனர், சினிமா கதாநாயகர்கள்.



தமிழக முதல்வர் ஜெயாவைச் சந்தித்து, பொன்னாடை போர்த்தி கோரிக்கை மனுவைக் கொடுக்கும் திரைப்பட நடிகர் சங்கத் தலைவரும் நடிகருமான விஜய்காந்த் மற்றும் நடிகை மனோரமா: வர்க்க பாசமும், தொழில் பாசமும் ஒன்றாய்க் கலந்த "செண்டிமெண்ட்" காட்சி.

ஆக, மயிர்முனை அளவுக்குக்கூட தான் வாழும் சமூகத்திற்கு பொறுப்பற்ற இந்த சுயநல, காரியவாத, பிற்போக்கு, வக்கிர, ஆபாச கும்பலை ஆளும் பாசிச கும்பல் பெருந்தீனி போட்டு ஊட்டி வளர்ப்பது தற்செயலான நிகழ்ச்சி அல்ல. ஆளும் கும்பல்களின் பாதுகாப்புடன் வளர்க்கப்படும் சினிமா ஊடகம் என்பது தனிச்சிறப்பாகத் திட்டமிட்டு தயாரிக்கப்பட்டு, அமைப்பு ரீதியில் திரட்டப்பட்டு உழைக்கும் மக்கள் மீது ஏவப்படும் ஆபாச ஆட்கொல்லி படை! மக்களின் மூளையை நேரடியாகத் தாக்கி அவர்களின் சமூக உணர்வைச் செயலிழக்க வைக்கும் வல்லமை படைத்தது இது!

எனவே, ஆபாசம், வக்கிரம், பிற்போக்கு, மூடத்தனம் என்ற எல்லைக்கு அப்பால் ஆளும் வர்க்க கும்பல்கள் சினிமா என்ற ஊடகத்தை வளரவிடுவதில்லை. மக்கள் பிரச்சினைகளை பேசும் குறும்படங்களையும் ஆவணப் படங்களையும் 'தணிக்கை' என்ற பெயரில் தடை செய்கின்றன அல்லது காட்சிகளைக் கடித்துக் குதறி முழுவதுமாக முடமாக்குகின்றன. ஆனந்த் பட்வர்த்தன், ராகேஷ் சர்மா, உசுமான் ரசாக் போன்ற இயக்குநர்களின் சமூக அக்கறையுள்ள படங்களைத் தணிக்கை என்ற பெயரில் தடை செய்து, வியாபாரமற்ற தனிக்காட்சிக்குக் கூட அவற்றை அனுமதிக்க மறுப்பது, நேரடியாக மிரட்டுவது என்று அடக்குமுறையை ஏவுகின்றன. பார்ப்பன பயங்கரவாதிகள் கட்டவிழ்த்துவிட்ட குஜராத் கலவரத்தை ஆவணப் படுத்திய பல படங்களை தடைச் செய்துள்ளன, ஆளும் கும்பல்கள். ஈழத்தை பின்புலமாகக் கொண்ட கதை என்பதால் "காற்றுக்கென்ன வேலி" என்ற சாதாரண தமிழ்ப் படத்தைக் கூட பல்வேறு தடைகளுக்குப் பிறகுதான் அனுமதித்தது, தணிக்கைத்துறை.

●●●

> தமிழக உழைக்கும் மக்களைவிட, எய்ட்ஸ் நோய்க்கு ஒப்பான இந்தத் திரைப்பட கழிசடைக் கும்பல்தான் உயர்ந்தவர்கள் என்றால், ஜெயா ஆட்சியை "மாமாக்களின் ஆட்சி" என்றுதான் கூற வேண்டும்!

திருட்டு வீ.சி.டி-ஐ ஒழித்து, தமிழ்த் திரையுலகத்தைக் காப்பாற்றத் தனிச் சட்டம் போடப்பட்டுள்ள அம்மா ஆட்சியில், தீப்பெட்டி தயாரிப்பு, நகைப் பட்டறை, கைத்தறி போன்ற பாரம்பரியமான கைத்தொழில்களும் கூடத்தான் நவீன தொழில் நுட்பத்தோடு போட்டியிட முடியாமல் நசிந்து வருகின்றன. இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பல இலட்சக்கணக்கான கைவினைஞர்களும், தொழிலாளர்களும் அத்துமீறி நுழையும் நவீன தொழில்நுட்பத்தை எதிர்த்துப் போராடும் பொழுது, அவர்களைக் காப்பாற்ற அம்மா மனம் இரங்கியதில்லை. மாறாக, இதுதான் நவீனமயம், தனியார்மயம், தாராளமயம் என போலீசின் குண்டாந்தடியைக் கொண்டு பாடம் நடத்தினார். நவீன தொழில்நுட்பம் புகுவதற்குத் தகுந்தவாறு தொழிலாளர்களும், கைவினைஞர்களும், விவசாயிகளும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் எனும் பொழுது, தமிழ்த் திரையுலகமும் வீ.சி.டி பிரச்சினைக்குத் தகுந்தாறு மாறிக் கொள்ள உபதேசிக்க் வேண்டியதுதானே!

ரேசன் அரிசி விலை உயர்வை எதிர்த்து தமிழக மக்கள் போராடியபொழுது, "கஜானா காலி" எனப் பஞ்சப் பாட்டுப் பாடியவர், ஜெயா.

போனசு போன்ற சட்டபூர்வ சலுகைகளுக்காக அரசு ஊழியர்கள் போராடிய பொழுது, அரசின் வருமானத்தில் 94 சதவீதத்தை அரசு ஊழியர்கள் தின்று தீர்ப்பதாக திட்டித் தீர்த்தவர், ஜெயா.

சென்னையில் உள்ள ராணி மேரிக் கல்லூரியை இடித்துத் தள்ள ஜெயா கும்பல் போட்ட திட்டத்தை அக்கல்லூரி மாணவிகள் எதிர்த்துப் போராடிய பொழுது, "போராட்டம் தொடர்ந்தால் உங்களுக்கெல்லாம் கல்யாணமே நடக்காது" என போலீசை ஏவிவிட்டு மிரட்டியவர், ஜெயா.


படிப்பகம்

கடன் சுமை தாள முடியாமல் தஞ்சை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட பொழுது, ''வைப்பாட்டி வைத்திருந்த விசயம் வெளியே தெரிந்து விட்டதால் தற்கொலை செய்து கொண்டதாக'' அவதூறை அள்ளி வீசியவர், ஜெயா.

இப்படி பல்வேறு வழிகளில் தமிழக மக்களைத் தொடர்ந்து அவமானப் படுத்தி வரும் ஜெயா, திருட்டு வீ.சி.டி.-ஐத் தடுக்கக் கோரி கதாநாயகர்களும், கதாநாயகிகளும், திரைப்பட முதலாளிகளும் ஊர்வலம் நடத்திய மறுநிமிடமே, திருட்டு வீ.சி.டி.-ஐ ஒழிக்கச் சட்டம் போடுகிறார்; அவர்களைக் கோட்டைக்கு அழைத்துப் பேசுகிறார்; வரிவிலக்கு உள்ளிட்ட ஏராளமான சலுகைகளை வாரி வழங்குகிறார். தமிழக உழைக்கும் மக்களைவிட எய்ட்ஸ் நோய்க்கு ஒப்பான இந்தத் திரைப்பட கழிசடைக் கும்பல்தான் உயர்ந்தவர்கள் என்றால், ஜெயா ஆட்சியை ''மாமாக்களின் ஆட்சி'' என்றுதான் கூற வேண்டும்!

சீரழிவு சினிமா கும்பலைச் சீராட்டும் பாசிச ஜெயா அரசின் சினிமா சலுகைகளை எதிர்க்கத் திராணியற்ற எதிர்க்கட்சி ஓட்டுப் பொறுக்கிகளும் தமிழ் சினிமாவின் ரசிகர்களாகி அக்கும்பலின் காலடியில் வீழ்ந்து கிடக்கிறார்கள். தமிழ்த் திரைப்படத்தின் பெயர்களையாவது தமிழில் வைத்து தமிழை வாழவைக்குமாறு சினிமாக் கும்பலிடம் மன்றாடுகிறார்கள். தற்போது தேர்தல் நெருங்கும் 'கிளைமாக்ஸ்' சமயத்தில் கலைஞர் கருணாநிதி மீண்டும் வெள்ளித்திரைக்கு தாவிவிட்டார். மேலும் சினிமா கும்பலுக்கு தி.மு.க. ஆட்சி, கடந்த காலத்தில் எப்படி கிடா வெட்டி பொங்கல் வைத்து, படையலிட்டு கொண்டாடியது என்பதை மலரும் நினைவுகளாக அசைபோடுகிறார்! இதன்மூலம் 'தாலி கட்டியவள் நானிருக்க நேற்று வந்தவளிடம் ஏன் மயங்குகிறீர்கள்' என்று 'செண்டிமெண்ட்' கலந்து சினிமா கும்பலிடம் உருக்கமாக மன்றாடுகிறார்.

ஆக, கிரிமினல்கள், திடீர் பணக்கார பொறுக்கிகள் ஆகியோரின் அரசியல் பிரதிநிதிகளான ஓட்டுப் பொறுக்கிகளுக்கும் அதே கும்பலின் கலாச்சார பிரதிநிதிகளான சினிமா கழிசடைகளுக்கும் எந்த வித்தியாசமுமில்லை; மக்களை ஏய்ப்பதில் எள் முனை அளவும் வேறுபாடு இல்லை. இவையிரண்டும் மக்களுக்கு உதவாத செல்லாத நாணயத்தின் இரண்டு பக்கங்கள்!

● பச்சையப்பன்

---




## வாசகர் கடிதம்

● வைகோவின் நடைபயணம் ஒரு வெங்காயம் என்ற கட்டுரையில், அவரது 'வீரதீரச் செயலை'ச் சுவையாக அம்பலப்படுத்திக் காட்டியிருப்பது அருமை. தன்னை ஒரு விவசாயியாக, கமாண்டோ படைவீரனாக வேடம் போட்டுக் கொண்டு கலக்கிய அவருக்கு, நடைபயணத்துக்கு முன்பே ஒரு வீரவாள் பரிசளித்து முதுகு சொரியக் கொடுத்திருக்கலாம்.

**– இராணி, கண்ணன்டள்ளி.**

● வைகோ மீதான விமர்சனம் தங்களின் கோட்பாட்டு ரீதியான பார்வையிலிருந்து நையாண்டித்தனமாக எழுதப்பட்டுள்ளது. இதை மார்க்சிய கண்ணோட்டம் உள்ளவர்கள் சரியானது என்பர். ஆனால் வைகோ அணிகளும் சாமானிய மக்களும் இதை ஏற்பார்களா? எனவே, வைகோவின் சந்தர்ப்பவாதத்தை இன்னும் கூர்மையாக அம்பலப்படுத்திக் காட்டியிருக்க வேண்டும்.

**– வாசகர்கள், உளுந்தூர்பேட்டை.**

● தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் போராட்டங்களைப் பற்றிய செய்திகள் பெரிதும் உணர்வூட்டுபவையாக உள்ளன. திருமாவளவனின் சந்தர்ப்பவாதத்தையும் 'தலித் முரசு' இதழின் சுய முரண்பாடுகளையும் தர்க்க ரீதியாகத் தோலுரித்துக் காட்டுகிறது ''பிழைப்புவாதமே தலித்தியமாக'' கட்டுரை.

**– கரிகாலன், தஞ்சாவூர்.**

● அமெரிக்க ஆக்கிரமிப்பக் கொடுமையால் ஈராக் மக்கள் கையறு நிலையில் தத்தளிக்கும்போது, அதைப் பயன்படுத்திக் கொண்டு கிறித்துவ மதவெறியர்கள் மதம் மாற்றுவதும் சலுகைகளை வாரி இறைப்பதும் மிருகத்தனமான ஈனச் செயல். இதுவரை வெளிவராத இத்தகவல் பெரிதும் அதிர்ச்சியூட்டியது. ''பிழைப்புவாதமே தலித்தியமாக....'' தொடர் கட்டுரையானது, தலித்திய பிழைப்புவாத தலைவர்களின் யோக்கியதையை வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டுகிறது. ''வைகோவின் நடைபயணம் ஒரு வெங்காயம்'' தலைப்பும் கட்டுரையும் சிறப்பு.

**– நிர்மலா, திருச்சி.**

● ஈராக்கில் கிறித்துவ மதவெறியர்களின் கீழ்த்தரமான நடவடிக்கை குறித்த கட்டுரையின் நடையும், தொடக்கத்திலும் இறுதியிலுமுள்ள கவிதை போன்ற வரிகளும் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட வேண்டுமென்ற உணர்வூட்டுகிறது. இந்தியாவைத் தொற்று நோயாகப் பீடித்துள்ள கிறித்துவ தன்னார்வக் குழுக்களை விரிவாக அம்பலப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.

**– ஜீவா, சென்னை**

● உண்மையான தலித் விடுதலைக்காகப் பாடுபடுபவர்களுக்கு, பிழைப்புவாதிகளையும், பித்தலாட்டக்காரர்களையும் எடைபோட்டுப் பார்க்க, ''பிழைப்புவாதமே தலித்தியமாக...'' தொடர் கட்டுரை பெரிதும் பயனளிக்கும். சி.பி.எம். இடமிருந்து செங்கொடியைப் பிடுங்கி விட்டால், அது ஒரு முதலாளித்துவக் கட்சிதான் என்பதை தலையங்கக் கட்டுரை தெளிவாக்குகிறது.

**– பாண்டியன், சென்னை.**

● வை.கோ.வின் வெங்காய நடைபயணக் கட்டுரை, நையாண்டி பாணியில் எடுப்பாக அமைந்துள்ளது. இதைப் படித்த ஒரு ம.தி.மு.க. பிரமுகர், இது பற்றி கருத்துக் கூற முடியாமல் தடுமாறி, தனது பொதுச் செயலாளரிடம் கேட்கிறேன் என்று கூறினார். அட்டைப் படமும் தலைப்பும் வெகு அருமை. கட்டுரைகளின் ஊடாக கேலிச் சித்திரங்களை வெளியிட்டால் இன்னும் எடுப்பாக இருக்கும்.

**– வாசகர் வட்டம், திருச்சி.**

# இந்தத் திண்ணைப் பேச்சு புரட்சியாளரைத் தெரியுமா?

மரியாதைக்குரிய மக்கள் கவிஞர் திருவாளர் இன்குலாப் அவர்களை உங்களுக்குத் தெரியுமா? ''சென்னை நகருக்கு வெளியே உள்ள ஊரப்பாக்கத்தில் அமைதியான சுற்றுச் சூழலில் வாழ்ந்துவரும் இந்தப் போராளியை''த் தெரியுமா?

இப்போது ''புரட்சியின் குறியீடாக வாழ்ந்துவரும்'' இவருக்கு அகவை 64. தனது போராட்ட வாழ்க்கையின் அகவை 40-க்கும் மேல் என்று கூறிக் கொள்ளும் இவர் பிழைப்புவாதிகளுக்கெல்லாம் ஒரு பேராசானாக விளங்குகிறார்: அதாவது, அரசியல், இயக்கம், போராட்டம் எதுவானாலும், அதனோடு ''தொடர்பு'' தான் வைத்துக் கொள்ள வேண்டும்; தொடுகோடாகத் தான் இருக்க வேண்டும்; ஐக்கியமாகி விடக் கூடாது. முதலில் திராவிட இயக்கம், பிறகு போலி இடதுகளுக்குள்ளும் வி.பி.சிந்தன் - இளவேனில் கும்பல் நடத்திய புரட்சிச் சவடால் இயக்கம், அப்புறம் நக்சல்பாரி இயக்கங்களிலேயே கடைகோடிச் சீரழிவுக்குப் போன வினோத் மிஸ்ரா குழு - இதிலும் கிறித்தவத் தன்னார்வக் குழுக்களைக் கொண்டு கட்டப்பட்ட இந்திய மக்கள் முன்னணி; இறுதியாக தாழ்த்தப்பட்டோர் தளத்தில் இருந்து செயல்படுவதாக முடிவு செய்தாராம்! இந்த முடிவைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அறிந்து கொள்ளாததும் கொண்டாடாததும் உண்மையிலேயே ஓர் இழப்புதான்!

இவ்வாறான ''தலித் பேராதரவாளரை''ப் புரிந்து கொள்ளாமல், ''இவர் ஒரு தலித் எதிர்ப்பாளர்'' என்று ''புதிய கோடாங்கி'' என்ற பத்திரிகை சார்பான சிலர் பிரச்சாரம் செய்கிறார்களாம். பொறுப்பற்ற சில தவறான மனிதர்களின் ஒரு குற்றச்சாட்டுத்தான் இதற்குக் காரணம் என்று ''உலகத் தமிழர்'' பத்திரிக்கையில் விளக்கமளித்துள்ளார் இன்குலாப். அதிலும் வேண்டுமென்றே ம.க.இ.க.வை இழுத்து ஒரு அவதூறும் செய்துள்ளார்.

'ஔவை' நாடகம் நடத்தச் சென்ற குழு விபத்தில் சிக்கி, அமைதி அரசு என்பவர் படுகாயமுற்றார். சென்னை அப்போலோவில் அவரைச் சேர்த்து சிகிச்சை அளித்த பேராசிரியர் வீ.அரசுவும் இன்குலாப்பும் அதற்காக ரூபாய் மூன்று இலட்சத்துக்கு மேல் நிதி திரட்டினர். மீதித் தொகையை நலிந்த கலைஞர்களுக்கு உதவக் கோரும் இன்குலாப் - வீ.அரசுவின் யோசனையை அமைதி அரசு குடும்பத்தினர் எதிர்த்தனர். இது சம்பந்தமாக, 'இந்த தலித் பசங்க பணத்தைக் கண்டதும் மாறிட்டாங்க' என்று பேரா. வீ.அரசு சொன்னதாக மினி என்ற மலையாளப் பெண் சொன்னார். ''உடனே அமைதி அரசுடன் இருந்த சில தோழர்கள், 'இதை முறையாக என்னவென்று சொல்லவில்லை என்றால் நாங்கள் பத்திரிக்கையில் எழுதுவோம்' என்று எச்சரித்தார்கள். இதை அருள்முருகன் என்ற ம.க.இ.க. தோழர் சொன்னார்'' என்று இன்குலாப் தனது தன்நிலை விளக்கத்தில் கூறியுள்ளார்.

இன்குலாப் அவர்களின் இழிசெயலைப் பாருங்கள்! அருள்முருகன் என்று யாரும் ம.க.இ.க.வில் கிடையாது. ம.க.இ.க. பத்திரிக்கையில் அப்படி யாரும் நினைத்ததை எழுதிவிடவும் முடியாது.

இன்குலாபின் இந்த தன்னிலை விளக்கத்தைக் கண்ட பிறகு அவர் குறிப்பிடும் அருள்முருகனை எமது தோழர்கள் நேரில் பார்த்து விசாரித்தபோது, தான் ம.க.இ.க. என்று யாரிடமும் கூறவில்லை. இன்குலாபிடமும் இதைத் தெரிவித்து விடுகிறேன் என்று விளக்கமளித்துள்ளார்.



**அரசியல், இயக்கம், போராட்டம் எதுவானாலும், அதனோடு தொடுகோடு போலத் ''தொடர்பு'' தான் வைத்துக் கொள்ள வேண்டும்; ஐக்கியமாகிவிடக்கூடாது என்பதுதான் இன்குலாபின் 'புரட்சிகர அரசியல்'.**

சம்பந்தமில்லாமல் ம.க.இ.க.வை அவர் ஏன் இழுக்க வேண்டும்? ம.க.இ.க.-வை இழுத்து அவதூறுக்குள்ளாக்கினால் ''தலித் எதிர்ப்பாளன்'' அல்லவென்று தன்னைக் காட்டிக் கொள்ளலாம். மேலும் இவரது தன்னார்வ நிறுவனங்கள் சார்ந்த அரசியல் பாதையை ம.க.இ.க. தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறது. அதேபோல பேரா. வீ.அரசு சொன்னதாக ஒரு கூற்றைச் சொன்னவர் மினி என்றாரு மலையாளப் பெண் என்ற விவரமும் சேர்க்கிறார், எதற்கு? அந்தக் கூற்றை மறுப்பதற்கு ஒரு குறுக்கு வழி. ''மலையாளப் பெண்'' என்பதால் உண்மையாக இருக்காது என்று நம்ப வைக்கும் இழிகுணம்! என்ன ஒரு தேசிய இனப்பற்று! இவர்தான் இன்குலாப்!

இதே இழிகுணத்தை, வேறொரு விசயத்திலும் இன்குலாப்பும் அவரது சகபாடிகளும் கடைபிடித்திருக்கிறார்கள். புதிய ஜனநாயகத்தின் மீது அவர் அவதூறு பேசி 'உலகத் தமிழர்' ஏட்டுக்குப் பேட்டியளித்ததை கண்டித்து உளுந்தூர்பேட்டையிலிருந்து இரண்டு புதிய ஜனநாயகம் வாசகர்கள், அவருக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அதற்கு முழுமையாகப் பதில் கூறத் திராணியற்ற இன்குலாப் இரு பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அதற்கும் சுற்றி வளைத்து மழுப்பியிருக்கிறார்.

அந்த உளுந்தூர்பேட்டை வாசகர்கள், தமது முகவரி விவரங்களோடு தாம் மாற்று அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டிருந்தும், புதிய ஜனநாயகம்தான் தனது சொந்த முகவரியில் இருந்து கடிதம் எழுதாமல், உளுந்தூர் பேட்டையிலிருந்து அனுப்பியது போலவும், இவர்கள், ''தாங்கள் சார்ந்த இதழ்களுக்கு நேரடியாகப் பொறுப்பேற்க மாட்டார்கள். இவர்கள் யாரோ? அந்த இதழ்கள் எவையோ?'' என்ற தோரணையில் எழுதியிருப்பதாகவும் கவிஞர் புனைந்துரைக்கிறார். வாசகர்கள் எப்படி இதழ்களுக்குப் பொறுப்பேற்க முடியும் என்பது மட்டுமல்ல, அவர்கள் மீதான நம்பகத் தன்மையையே இழிவுபடுத்துகிறார்.

திருமாவளவனையும் கிருஷ்ணசாமியையும் அந்நிய ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களோடு ஆதாரமின்றி பு.ஜ. தொடர்புபடுத்திக் குற்றஞ் சாட்டுவதாகக் கூறுகிறார். திருமாவளவனின் ஒப்புதல் வாக்குமூலமே வெளி

www.padippakam.com

வந்திருக்கிறது. இது தொடர்பான பிரச்சினை காரணமாகத்தான் திருமாவளவன் அமைத்த ''தலித் விடுதலைக் கூட்டணி'' உடைந்து போனது இன்குலாப்புக்குத் தெரியாமல் இருக்கலாம்! ஆனால், கிருஷ்ணசாமியுடன் இந்திய மக்கள் முன்னணிக் காலத்திலிருந்தே இணைந்து பணியாற்றியதையும் அவரது தற்போதைய ஆலோசகர் டி.எஸ்.எஸ்.மணியின் தலைமையில் இயங்கியதையும் இன்குலாப் மறந்து விட்டாரா? ஊரப்பாக்கம் திண்ணைப் புரட்சியாளரின் நினைவுகளில் இவை மலர்வதில்லையோ?

- ஆசிரியர் குழு

# பு.ஜ. மீதான இன்குலாபின் அவதூறுகளுக்கு வாசகர்கள் பதிலடி

***திரு. இன்குலாப் அவர்களுக்கு,***

தங்களின் நேர்காணல் பேட்டியை உலகத் தமிழர் சக்தி இதழில் படித்தேன். அதில் நீங்கள் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் இதழ்களையும் அதன் அமைப்பையும் விமர்சனம் செய்துள்ளீர்கள். அதன் சுருக்கம் 1. தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரானது 2. நட்பு என்று அணுகுவது உளவு வேலை பார்க்கத்தான்; என் முன்னால் (அவர்கள்) ஒற்றனாக இருப்பதை நான் எப்படி ஏற்க முடியும். 3. அப்பத்திரிக்கைகள் வெறும் குப்பைகள். 4. திருமாவளவனை அவன், இவன் என்று எழுதுகிறார்கள். 5. இவர்கள் எல்லோரையும் குறை சொல்லுகிறார்கள். 6. தேர்தல் பாதை திருடர் பாதை என்று சுவர்களில் எழுதுவதைத் தவிர இவர்கள் என்ன செய்தார்கள்? 7. தனிநபர் இடது தீவிரவாதம் என்று நக்சல்பாரிகளையே குறை சொன்னவர்கள், எப்படி நக்சல்பாரிகளாக இருக்க முடியும்?

மதிப்பிற்குரிய இன்குலாப் அறிவது, இதில் ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

1. சுமார் பத்து பதினைந்து ஆண்டுகள்தான் தமிழகத்தில் பரவலாக ம.க.இ.க.வினர் அறிமுகமாகி, பல விவாதங்களை எதிர்கொள்கிறார்கள். அப்படி ஒன்றும் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தி தோன்றியது அல்ல அவ்வமைப்புகள். எல்லாம் நம் நிகழ்காலத்திலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒரு அமைப்பை தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரானது என்பதற்கு என்ன சான்று? தமிழகத்தின் எந்தெந்தப் பகுதியில், எந்தெந்தப் போராட்டங்களில் அவர்கள் காட்டி கொடுத்தார்கள் அல்லது அமைப்பு உள்ள இடத்தில் வேண்டுமென்றே ஒதுங்கி இருந்தார்கள்? அல்லது ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று சான்று இருந்தால் வெளியிட வேண்டும்.

2. நட்பு என்று அணுகுவது உளவு பார்க்கத்தான்; என் முன்னால் ஒற்றனாக உட்கார்ந்து இருப்பதை எப்படி ஏற்க முடியும் என்கிறீர்கள். அப்படி என்ன அவர்கள் (ம.க.இ.க.) உங்கள் இரகசியங்களை (அ) மிகவும் உங்கள் புரட்சிகரமான திட்டங்களை - ஆய்வையும் கண்டுபிடித்து அவர்கள் கடத்திச் சென்று விட்டார்கள்? அல்லது நீங்கள் தலைமறைவாக இருக்கும்போது உங்களைக் காட்டி கொடுத்து விட்டார்களா?

3. அப்பத்திரிக்கைகள் (பு.ஜ., பு.க.) குப்பைகள் என்று மதிப்பிட்டிருக்கின்றீர்களே, பொதுவாகப் பத்திரிக்கைகளை தரம் பிரிப்பதற்கான உங்கள் அளவுகோல் என்ன? மஞ்சள் பத்திரிக்கை, பக்தி பத்திரிக்கை, ஆபாசப் பத்திரிக்கை போன்று இல்லாமல், இதை விட இன்னும் மோசமாக அப்பத்திரிக்கைகளில் அப்படி என்ன செய்திகள், கட்டுரைகள் வந்துள்ளன? அவ்வாறு பிரசுரமாகியிருந்தால் அவற்றைக் கட்டம் கட்டி வெளியிடவும்.

4. திருமாவளவனை அவன் இவன் என்று எழுதியதாக கூறுகின்றீர்கள். எந்த இதழில், எந்த ஆண்டில் அப்படி அவர்கள் எழுதினார்கள் என்பதையும் கூறுங்கள். மேலும் அப்பத்திரிக்கைகளின் தொகுப்பு உங்களுக்குத் தேவைப்பட்டால் அனுப்பி வைக்கிறேன் (ஏனெனில் நீங்கள் பு.ஜ., பு.க.வைப் படித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதாகக் கூறியுள்ளீர்கள்.)

5. அவர்கள் எல்லோரையும் குறை சொல்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். சின்ன பசங்க மாதிரி கோபித்துக் கொள்ள வேண்டாம். நீ ஏன் விபச்சாரம் செய்கிறாய் என்றால், இல்லை என்று கூறுங்கள்; அல்லது அது என் தொழில், நிலைமை என்று அதற்கான விளக்கத்தைக் கூறுங்கள். அதை விட்டுவிட்டு ஏன் திருமாவளவன், அ.மார்க்ஸ் போன்ற அனைவரையும் சேர்த்துக் கொண்டு கண்கலங்குகிறீர்கள்? ''ஆந்தையாரும் கழுகாரும் போன்று எந்தவித ஆதாரமும் காட்டாமல் நரி விடும் கரடி விட வேண்டாம்.''

6. தேர்தல்பாதை திருடர் பாதை என்று எழுதுவதைத் தவிர வேறு என்ன செய்தார்கள் என்று கேட்கிறீர்கள்? அதைக் கூட உங்களால் சுவர்களில் எழுத முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதா? அதற்காக அவர்கள் எத்தனை வழக்குகள், அடிதடிகளைச் சந்தித்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?

7. தனிநபர் இடது தீவிரவாதம் என்று நக்சல்பாரிகளையே குறை சொன்னவர்கள் எப்படி நக்சல்பாரிகளாக இருக்க முடியும் என்று வேறு கேட்டுள்ளீர்கள். ஒன்றுபட்ட நக்சல்பாரி கட்சியில் சுமார் பத்தாண்டு காலம் அவர்கள் மேற்கொண்ட பாதை முறைகளை அவர்களுக்குள் விவாதித்துத் தனித்தனி குழுவாக வெவ்வேறான நிலைபாட்டில் பிரிந்து செயல்படுகிறார்கள். அந்த உட்கட்சி விவகாரங்களைக் குறை சொல்ல நீங்கள் என்ன இடது தீவிரவாதப் பாதையிலா செயல்பட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்? அப்படியானால் எங்களது விழுப்புரம் மாவட்டத்திற்கும் கொஞ்சம் வந்து விட்டுச் செல்லுங்கள் இங்கு பண்ணையார்கள், ரவுடிகள், போலீசு, சாதிவெறியர்கள், சுரண்டல்காரர்கள் கூட்டம் தலைவிரித்தாடுகிறது. தயவு செய்து உங்கள் தலைமையிலான தனிநபர் படையை வரவேற்கக் காத்து இருக்கிறேன்; வருவீர்களா? அடுத்த இதழில் தூது அனுப்புங்கள்.

*இப்படிக்கு,*<br>
*ச. தண்டபாணி,*<br>
*பாலி -அஞ்சல்,*<br>
*வேலா. கந்தசாமி,*<br>
*(DYFI, வட்டத்துணைத்தலைவர்)*<br>
*எடைக்கல் கிராமம், உளுந்தூர்பேட்டை.*

***குறிப்பு: உலகத் தமிழர் சக்தி இதழுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்கிற தகவலுக்காக இதை உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.***

## பிழை திருத்தம்

அக்.2004 இதழில் - பக். 7-இல் வெளியான முற்போக்கு இளைஞர் அணி தோழர்கள் சிறைக்குள் இருந்து நடத்திய பொடா எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் பற்றிய கட்டுரையின் தலைப்பு ''பொடா'' சட்டத்தைப் பின்தேதியிட்டுத் திரும்பப் பெறு என்றிருப்பதை, ''பொடா'' சட்டத்தை முன் தேதியிட்டுத் திரும்பப் பெறு எனத் திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். மேலும் அக்கட்டுரையின் இறுதிப் பத்தியில் உள்ள ''.... பின் தேதியிட்டு யார் மீது வேண்டுமானாலும் ''பொடா''வை ஏவலாம்'' என்ற வரிகளை ''முன்தேதியிட்டு யார் மீதுவேண்டுமானாலும் பொடாவை ஏவலாம்'' என்றும் திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். எங்களது கவனக் குறைவால் ஏற்பட்டுவிட்ட இந்தப் பாரிய தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்றுக் கொள்வதோடு, இனி இது போன்ற தவறுகள் நிகழா வண்ணம் செயல்படுவோம் என உறுதியளிக்கிறோம்.

*- ஆசிரியர் குழு*



படிப்பகம்

www.padippakam.com

# வல்லரசுகளின் நயவஞ்சகமும் இந்தியாவின் துரோகமும்

உலக வர்த்தகக் கழகத்தில் இணைந்துள்ள ஏழை நாடுகளின் விவசாயத் துறையிலும், சேவைத் துறையிலும் தாராளமயத்தை ஒரே மாதிரியான முறையில், மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு, உலக வர்த்தகக் கழகம் கத்தார் நாட்டு தலைநகர் தோஹாவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமைச்சர்கள் மாநாட்டை நடத்தியது. உ.வ.க.வின் தாய் அமைப்பான "காட்"டில் நடந்த உருகுவே பேச்சு வார்த்தைக்கு இணையான ஒன்றாக தோஹா பேச்சுவார்த்தை கருதப்பட்டது. இப்பேச்சுவார்த்தை தோஹாவில் ஒரு முடிவுக்கு வராததையடுத்து, அக். 2003-இல் மெச்சிகோ நாட்டில் உள்ள கான்கன் நகரில் நடந்த அமைச்சர்கள் மாநாட்டிலும் பேச்சு வார்த்தை தொடர்ந்தது.

கான்கன் நகரில் நடந்த பேச்சுவார்த்தையின் மூலம் ஏழைநாடுகளின் மீது திணிக்கப்படவிருந்த சீர்திருத்தங்களை எதிர்த்து உலகெங்கிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன; கான்கன் நகரமே போர்க்களம் போல் ஆனது; இந்தியா உள்ளிட்டு அனைத்து ஏழை நாடுகளும், தங்களின் விவசாயத் துறையில் மேலும் தாராளமயத்தைப் புகுத்த மறுத்துவிட்டன. இதனால் கான்கன் மாநாடு, ஏகாதிபத்திய நாடுகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாகத் தோல்வியில் முடிந்தது.

தோஹா பேச்சு வார்த்தையின் ஆயுள் முடிந்துவிட்டது என கடந்த ஓராண்டாக முதலாளித்துவ பத்திரிகைகளே சந்தேகத்தோடு எழுதிக் கொண்டிருந்த வேளையில், அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து அதற்கு மீண்டும் உயிர் கொடுத்துள்ளன. கடந்த ஜூலை மாதம் சுவிட்சர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவில் நடந்த உ.வ.க.வின் பொது கவுன்சில் கூட்டத்தில், அடுத்த ஆண்டுக்குள் தோஹா பேச்சு வார்த்தையில் இறுதி முடிவை எட்டுவது என 'ஒருமனதாக' ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கான வரைவுத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு திட்டம் "ஜூலை ஒப்பந்தம்" என அழைக்கப்படுகிறது. அமெரிக்காவும், ஐரோப்பியக் குழுமமும் "தங்கள் நாடுகளின் விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்கு வழங்கிவரும் மானியத்தையும்; கடன் உதவிகளையும் ஓரளவு குறைத்துக் கொள்வதாக" வாக்குறுதி கொடுத்து, ஏழை நாடுகளை ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடச் செய்துவிட்டன..

உருகுவே பேச்சுவார்த்தை முடிவுகளின்படி, அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் தங்கள் நாடுகளின் விவசாயத்திற்குத் தரும் மானியத்தை 1999-ஆம் ஆண்டு தொடங்கியே குறைத்து வந்திருக்க வேண்டும். அந்த ஒப்பந்த முடிவுகளையே மதிக்காத அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் இந்த வாக்குறுதிகளை மதித்து நடக்குமா எனத் தாராளமயத்தின் ஆதரவாளர்களே சந்தேகத்தை எழுப்புகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் விவசாயத்திற்குத் தரும் பல்வேறு விதமான மானியங்களை, "நீலப்பெட்டி, பச்சை பெட்டி, ஆம்பர் பெட்டி" என மூன்று அடுக்குகளாகப் பிரித்து வைத்துள்ளன. உலக வர்த்தகக் கழகத்தின் சட்டங்களின் படியே, நீலப்பெட்டி, பச்சை பெட்டிகளின் கீழ் தரப்படும் மானியங்களைக் குறைக்க வேண்டியதில்லை.

அமெரிக்கா, இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு, நீலப்பெட்டி அடுக்கின் கீழ் வழங்கப்படும் மானியத்தின் அளவை உயர்த்திக் கொள்ள ஜெனிவா பேச்சு வார்த்தையின் பொழுது பேரம் நடத்தி, அதில் வெற்றியும் பெற்று விட்டது. அதாவது, தற்பொழுது ஆம்பர் பெட்டி அடுக்கின் கீழ் வரும் மானியச் சலுகைகளை, நீலப் பெட்டிக்குக் கொண்டு செல்வதன் மூலம், மானியத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்து அமெரிக்கா தப்பித்துக் கொள்ளும்.

"சில அத்தியாவசிய விவசாய விளைபொருட்களுக்கு மானியத்தைக் குறைக்க வேண்டியதில்லை" என்ற சிறப்புச் சலுகை ஏழை நாடுகளுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போல, தங்களுக்கும் வழங்க வேண்டும் என வாதாடி, அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் புதிய சலுகையொன்றையும் பெற்றுக் கொண்டுள்ளன. ஏழை நாடுகளில் விவசாயத்திற்கு வழங்கப்படும் குறைந்தபட்ச மானியம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானால், தங்களுக்கு இந்தப் புதிய சலுகை வழங்கப்பட வேண்டும் என மிரட்டி, அமெரிக்காவும், ஐரோப்பியக் குழும நாடுகளும் தாங்கள் நினைத்ததைச் சாதித்துக் கொண்டு விட்டன.

ஐரோப்பியக் குழும நாடுகள், விவசாயத்திற்கு வழங்கும் மானியத்தில் 20 சதவீதம் குறைத்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டுள்ளன. இந்தத் 'தாராள' மானியக் குறைப்பின் பின் கூட

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

தோஹா பேச்சு வார்த்தைக்கு உயிர் கொடுப்பதற்காக, ஜெனீவா நகரில் நடந்த உலக வர்த்தகக் கழகத்தின் பொதுகவுன்சில் கூட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

## தோழர் ஸ்டாலின் மீதான ஜூ.வி. - மதனின் அவதூறுக்கு மறுப்பு:

# புரட்சியின் நாயகனை கிசுகிசு எழுத்தாளன் அவதூறு செய்ய அனுமதிப்பதா?

**வாரமிருமுறை வெளிவரும் ''ஜூனியர் விகடன்'' என்ற பார்ப்பன ஆபாச, கிசுகிசுப் பத்திரிக்கையில் அதன் முன்னாள் ஆசிரியர் மதன், ''மனிதனுக்குள்ளே ஒரு மிருகம்'' என்ற தலைப்பில் ஒரு தொடர் எழுதி வருகிறார். அதன் கடந்த அக்டோபர் 6,10 ஆகிய இரு இதழ்களில் தோழர் ஸ்டாலினைக் குறித்து பல்வேறு அவதூறுகளை எழுதியுள்ளார். இதைக் கண்டித்து சென்னை நகரில் சுவரொட்டி இயக்கம் நடத்திய மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய அமைப்பினர், ஜூ.வி. அலுவலகத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஜூ.வி. பொறுப்பாளர்களைச் சந்தித்து நேரடியாகவும், இரண்டு கடிதங்கள் மூலமாகவும் கடும் கண்டனத்தையும் ஸ்டாலின் மீதான அவதூறுகளுக்கு மறுப்பும் தெரிவித்தனர். மறுப்பை வெளியிடுவதாக ஒப்புக் கொண்ட ஜூ.வி. நிர்வாகம், அது நீண்டதாக இருப்பதாகவும், அரைப்பக்க அளவுக்கு சுருக்கித் தரும்படியும் கேட்டுக் கொண்டது. சுருக்கித் தரப்பட்டதிலும் சில வரிகளை வெட்டிவிட்டு வெளியிட்டது. ஜூ.வி. ஏட்டுக்கு தரப்பட்ட கடிதத்தை முழுமையாகக் கீழே வெளியிடுகிறோம்.**

**இதற்கிடையே அந்தக் கடிதத்தைப் படித்த பார்ப்பன எழுத்தாளன் மதன், அதில் கண்டுள்ள ஒரே ஒரு விசயத்துக்கு மட்டும் விளக்கமளித்துள்ளார். அதாவது, ஸ்டாலின் பதவிக்கு வந்தது 1924-இல்; அவரது ஆட்சியை விமர்சனம் செய்து எழுதிய - மதன் ஆதாரம் காட்டும் டால்ஸ்டாய் 1911-லேயே இறந்து போனார் என்று கண்டனக் கடிதத்தில் எழுதியிருந்தது. ''அந்த டால்ஸ்டாய் வேறு, இந்த டால்ஸ்டாய் வேறு; இவர் 1945-இல் தான் இறந்தார்'' என்பது மதனுடைய விளக்கம். இப்படி விளக்கமளிப்பதன் மூலம் இரண்டு உண்மைகளை மதன் ஒப்புக் கொள்கிறார். முதலாவதாக, இந்த ஒரு விசயம் தவிரக் கண்டனக் கடிதத்தில் கண்டுள்ள வேறு எதற்கும் மதனிடம் விளக்கம் கிடையாது. இரண்டாவதாக, அவரே குறிப்பிடும் டால்ஸ்டாய் கூட தோழர் ஸ்டாலினுடைய ஆட்சியை அவர் அதிகாரத்தில் இருந்தபோதே விமர்சித்திருக்கிறார்; அப்படி விமர்சித்துவிட்டு எந்தக் கொடுமைக்கும், சித்திரவதைக்கும் ஆளாகாமல் இயற்கையாகவே மாண்டு போனார். பார்ப்பன எழுத்தாளர் மதன் குறிப்பிடுவதைப் போல ஸ்டாலினை விமர்சித்தவர்கள் மிருகத்தனமாக நடத்தப்பட்டதாகக் கூறுவது பொய் என்பதற்கு இதுவே ஆதாரமாக உள்ளது.**

கிரிமினல்கள், கொடுங்கோலர்கள், மனநோயாளிகள், காமவெறியர்கள் போன்றோரின் 'வரலாற்'றை சுவாரசியமான தீனியாக ஜூனியர் விகடன் வாசகர்களுக்கு வழங்கி வரும் மதன், கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர் ஸ்டாலினையும் இவர்களின் பட்டியலில் சேர்த்திருக்கிறார்.

பிறப்பால் உயர்ந்தவர்களும், மன்னர்களும், முதலாளிகளும் மட்டும் தான் நாடாள முடியும் என்று நம்பிக் கொண்டிருந்த உலகத்தில் உழைக்கும் வர்க்கம் உலகாள முடியும் என்று நிரூபித்துக் காட்டியது கம்யூனிசம். ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் - அதாவது ஒரு சக்கிலியின் மகன் - உலகத் தலைவராக முடியும் என்று நிரூபித்துக் காட்டியது லெனின் உருவாக்கிய ரசிய கம்யூனிஸ்டு கட்சி.

லெனினுடைய மறைவுக்குப் பின், உலகின் முதல் சோசலிச நாட்டை உருவாக்கிக் காட்டிய தோழர் ஸ்டாலினின் பணி மகத்தானது. ஸ்டாலின் தலைமையிலான ரசியாவிற்கு நேரில் சென்று வந்த தாகூர் பாராட்டியிருக்கிறார். கலைவாணர் என்.எஸ்.கே. 'இரும்புத் திரை நாடு' என்று ரசியாவைச் சித்தரித்த முதலாளிகளின் பொய்ப் பிரச்சாரத்தைக் கேலி செய்து கட்டுரை எழுதியிருக்கிறார். ரசியாவின் சிறைகள் உள்ளிட்ட எல்லா இடங்களுக்கும் சுதந்திரமாகச் சென்று பார்த்த பெரியார் ''இது தான் உண்மையான மனிதர்கள் வாழும் நாடு'' என்று பாராட்டியிருகிறார்.

'அறிஞர்' மதனோ அத்தகைய மனிதர்களுக்குத் தலைமை தாங்கிய ஸ்டாலின் ஒரு மிருகம் என்று நமக்கு வரலாறு சொல்லித் தருகிறார். அரசவைகளிலும் அந்தப்புரங்களிலும்தான் வரலாறு உருவாக்கப்படுகிறது என்பது மதன் போன்ற வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. இந்தக் கருத்தின் அடிப்படையில் அமெரிக்க, ரசிய 'அறிஞர்'களால் எழுதப்பட்ட பல கம்யூனிச எதிர்ப்பு - 'கிளு கிளு ஜிலு ஜிலு வரலாறுகள்' அண்ணாசாலையின் நடைபாதைக் கடைகளில் கிடைக்கும். ''சொந்த வாழ்க்கையில் சோத்துக்கில்லாமல் கஷ்டப்பட்ட வெறுப்பில்தான் முதலாளிகளுக்கெதிராக கம்யூனிச தத்துவத்தை கார்ல் மார்க்ஸ் உருவாக்கினார்'' என்று ஆதாரபூர்வமாக 'நிரூபிக்கும்' நூல்களும் அவற்றில் கிடைக்கும்.

தன்னுடைய கட்டுரை ஆதாரபூர்வமானது என்று மதன் விளக்கமளித்துள்ளார். அவருடைய ஆய்வு நேர்மையை எடுத்துக்காட்ட ஒரே ஒரு சான்று மட்டும் தருகிறோம்.

ஸ்டாலின் ஆட்சியில் ஏதாவது ஒரு விதத்தில் சோகத்தால் பாதிக்கப்படாத குடும்பமே கிடையாது என்று ரசிய இலக்கிய மேதை டால்ஸ்டாய் கூறியதாக தனது கட்டுரையில் ஆதாரம் காட்டியிருக்கிறார் மதன்!

ஸ்டாலின் பதவிக்கு வந்தது 1924-ஆம் ஆண்டு. டால்ஸ்டாய் இறந்தது 1911-இல். ஸ்டாலினுக்கு எதிராக ஆவியுலக ஆதாரங்களையெல்லாம் ரொம்பவும் கஷ்டப்பட்டுத்தான் சேகரித்திருக்கிறார் மதன். இதை ஒப்பிடும்போது ''குருசேவை டான்ஸ் ஆடச் சொன்னார்; கை தட்டச் சொன்னார்; செகரட்டரி விரல்களுக்குத் தீ வைத்தார்'' என்று மதன் வழங்கும் ஆதாரங்கள் எல்லாம் ரொம்பச் சாதாரணமானவை.

வரலாற்றில் ஸ்டாலினின் பாத்திரத்தை மதிப்பிடுவதற்கும், ஜெயலட்சுமியின் பாத்திரத்தை மதிப்பிடுவதற்கும் 'ரொம்பவே' வேறுபாடு உண்டு என்பதை மதன் புரிந்து கொள்வது நல்லது.

ஸ்டாலின் அளவிற்கு உலக முதலா



படிப்பகம்

www.padippakam.com

ளித்துவத்தால் அவதூறு செய்யப்பட்ட தலைவர் வேறு யாரும் இல்லை. காரணம், மதன் கூறுவது போல அவரது ஆட்சி தோற்றுவித்தது வேதனைகள் அல்ல; அவரது சாதனைகள்.

மிகவும் பின்தங்கிய விவசாய நாடாக இருந்த ரசியாவை பதினைந்தே ஆண்டுகளில் தொழில் வல்லரசாக மாற்றியதும், பத்து சதவீதம் கூட கல்வியறிவு பெற்றிராத நாட்டை ஏறத்தாழ நூறு சதவீதக் கல்வியறிவு கொண்ட நாடாக மாற்றியதும், உலகப் பொருளாதாரமே நெருக்கடியில் சிக்கி அமெரிக்க மக்கள் கஞ்சித் தொட்டிக்கு முன் கையேந்தி நின்ற 1930-களில் ரசியா மட்டும் முன்னேறியதும், ஹிட்லரிடமிருந்து உலகையே காப்பாற்றியதும் ஸ்டாலினின் தலைமையில் ரசிய மக்கள் சாதித்த வெற்றிகள். இவற்றுக்கு ஈடு சொல்லும் வெற்றிகள் இன்றுவரை உலகில் கிடையாது.

கம்யூனிச எதிர்ப்பையே தனது முதற்கொள்கையாகக் கொண்ட ஹிட்லர் தொடங்கி வைத்ததுதான் ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரம். அடால்ஃப் ஹிட்லரின் நண்பரான அமெரிக்க பத்திரிகை முதலாளி ரடால்ஃப் ஹெர்ஸ்ட் குடும்பத்துக்குச் சொந்தமான நியூயார்க் மார்னிங் போஸ்ட், 24 வார இதழ்கள், 12 வானொலி நிலையங்கள் ஆகிய அனைத்தின் மூலமும் 1930 முதலே தொடங்கி விட்டது இந்தப் பிரச்சாரம். ஹிட்லரின் வலதுகரமான கோயரிங்கின் கட்டுரைகளைப் பிரசுரிக்குமளவு வெளிப்படையான நாஜி ஆதரவாளன் ஹெர்ஸ்ட். கனடா நாட்டுப் பத்திரிகையாளர் டக்ளஸ் டோட்டில் எழுதிய நூல் இவையனைத்தையும் அம்பலமாக்குகிறது. இன்னொரு ஸ்டாலின் எதிர்ப்பாளரான ராபர்ட் கான்குவெஸ்ட் பிரிட்டிஷ் உளவு நிறுவனமான எம்.15-இன் கையாள் என்பதையும் நிரூபிக்கிறார் டோட்டில். ஸ்டாலின் காலத்தில் லட்சக்கணக்கானோர் படுகொலை - பட்டினிச் சாவு என்பதெல்லாம் கான்குவெஸ்ட் என்ற உளவாளி உருவாக்கிய புனைகதைகள்.



“ஸ்டாலின் அளவிற்கு உலக முதலாளித்துவத்தால் அவதூறு செய்யப்பட்ட தலைவர் வேறு யாரும் இல்லை. காரணம், மதன் கூறுவது போல அவரது ஆட்சி தோற்றுவித்தது வேதனைகள் அல்ல; அவரது சாதனைகள்.”

இவையெல்லாம் ஒரு நூலுக்கு எதிராக இன்னொரு நூலை ஆதாரம் காட்டும் முயற்சிகளல்ல. 50 ஆண்டுகளுக்கு முந்தைய அரசு ஆவணங்களை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்ற பிரிட்டிஷ் அரசு விதிகளின்படி வெளியான எம்-15 என்ற பிரிட்டிஷ் உளவு நிறுவனத்தின் ஆவணங்களில் பிரிட்டிஷ் உளவாளிகளின் பட்டியல் இருக்கிறது.

1943-இல், ஹிட்லர் ஆக்கிரமிப்புக்கு எதிராக ரசியா போராடிக் கொண்டிருந்தபோது 'விலங்குப் பண்ணை' என்ற நாவல் மூலம் கம்யூனிசத்தை அவதூறு செய்த ஜார்ஜ் ஆர்வெல், கவிஞர் ஸ்டீபன் ஸ்பென்டர், 'பகலில் இருள்' என்ற ஸ்டாலின் எதிர்ப்பு நூல் எழுதிய கீஸ்லர், பிரபல அறிஞர் ரஸ்ஸல் ஆகிய அனைவரும் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்திற்காக பிரிட்டிஷ் உளவுத் துறையிடம் காசு வாங்கியிருக்கிறார்கள். இந்த உண்மை 1996-இல் பிரிட்டனில் வெளியாகி சந்தி சிரித்தது.

"வெளிநாட்டவர்கள் இருக்கட்டும். ரசிய எழுத்தாளரும் நோபெல் பரிசு பெற்றவருமான சோல்ஜெனிட்சின்னே ஸ்டாலின் ஆட்சியைப் பற்றி சொல்லவில்லையா?" என்று வாதிடலாம். அவருக்கு நோபெல் பரிசு கிடைக்கக்

தொடர்ச்சி 19-ஆம் பக்கம்

## 'மார்க்சிஸ்டு'களின் பூணூல் பாசம்

தில்லானா மோகனாம்பாள் வைத்தி பத்திரிகையாளனாக அவதரித்தால்...? அவன் மதன் என்று அழைக்கப்படுவான். மதனின் கிளுகிளு, ஜிலுஜிலு, திக்திக் 'வரலாறுகளை' படித்த வாசகர்கள் இதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவனின் வரலாற்றின் மீது ஒரு சொறி நாய் ஒன்னுக்கடிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் 'கம்யூனிஸ்டு' கட்சியை எப்படிப் புரிந்து கொள்வது?

தோழர் ஸ்டாலினை இட்லருடன் ஒப்பிட்டும், மனநோயாளியாகச் சித்தரித்தும் ஜூ.வி.யில் மதன் அவிழ்த்து விட்ட புளுகு மூட்டைகளை ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. தோழர்கள் நேரில் சென்று கண்டித்தனர். ஆனந்த விகடன் அலுவலகத்தையும், மதன் வீட்டையும் சுற்றிக் கண்டனச் சுவரொட்டி ஒட்டினர். தஞ்சை ம.க.இ.க. தோழர்கள் ஜூ.வி. இதழை எரித்துக் கைதாயினர். இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகுதான் மறுப்புச் செய்தியை வெளியிட்டது ஜூ.வி.

ஆனால், ஸ்டாலினைத் தமது சர்வதேசத் தலைவர்களில் ஒருவர் என்று அறிவித்துக் கொள்ளும் மார்க்சிஸ்டு கட்சியோ இது குறித்து வாய் திறக்கவில்லை. பாரதியின் எழுத்தில் காணும் முரண்பாடுகளை விமர்சித்து வே. மதிமாறனின் 'பாரதிய ஜனதா பார்ட்டி' என்ற நூல் வெளிவந்தவுடனே, ரத்தக் கொதிப்புக்கு ஆளாகி பாரதி இல்லத்தில் கூட்டம் போட்டுக் கண்டித்தது முற்போக்கு எழுத்தாளர் சங்கம்.

அந்த ரத்த பாசம் ஸ்டாலின் விசயத்தில் வேலை செய்யாதது ஏன்? ஸ்டாலினுக்கெதிரான அமெரிக்கக் கூலிகளின் அவதூறுகளை எதிர்த்து புத்தகம் எழுதியிருக்கிறார் எம்.ஆர். அப்பன். ஆனந்த விகடன் அவதூறுக்கு ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடவா முடியாது? மார்க்சிஸ்டுகளுக்கும் மதனுக்கும் என்ன உறவு? 'அன்பே சிவம்' படத்தில் சேர்ந்து நடித்த தோழமையா, அல்லது முதலாளித்துவ பத்திரிகைகளைக் 'கவர்' பண்ணும் செயல் தந்திரமா?

கம்யூனிசத் தலைவர்களுக்காகக் குரல் கொடுப்பதை, கால தேச வர்த்தமானங்களுக்கு ஒத்துவராத அசௌகரியமான வேலையாக மார்க்சிஸ்டுகள் கருதக்கூடும். அவ்வாறாயின் கட்சிப் பெயரிலிருந்தும் அவர்களைக் கழற்றிவிட்டு விடலாமே! உங்களுக்கும் வேலை மிச்சம். எங்களுக்கும் இதையெல்லாம் எழுதும் வேலை மிச்சம்!


படிப்பகம்

# சிறுபொறி பெருங்காட்டுத் தீயை மூட்டும்!

## டாடாவைப் பணிய வைத்த தொழிலாளர் வர்க்கப் போராட்டக் கதை

**டா**டா - இந்தியாவின் மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனம். இந்திய ஆட்சியாளர்களைத் தனது சட்டைப் பையில் வைத்திருக்கும் கோடீசுவர நிறுவனம். போலீசு, நீதித்துறை, பத்திரிக்கை, தொலைக்காட்சி, தொழிற்சங்கம், அரசியல்வாதி - என அனைவரையும் விலைக்கு வாங்கக் கூடிய அளவுக்கு கொட்டை போட்ட ஏக போக நிறுவனம். இம்மிகப் பெரிய தரகு முதலாளித்துவ நிறுவனத்தின் பழி வாங்கலையும் பகற்கொள்ளையையும் எதிர்த்து, அந்நிறுவனத்தின் வேலைநீக்கம் செய்யப்பட்ட 70 தொழிலாளர்கள் கடந்த ஓராண்டாகத் தொடர்ந்து போராடி வெற்றியைச் சாதித்துள்ளனர். பூதாகரமான டாடாவைப் பணிய வைத்து நிவாரணத் தொகையுடன் ரூ. 2 கோடியை நட்டஈடாகப் பெற்றுள்ளனர். எண்ணிக்கையில் மிகச் சிறிய சக்தியான இத்தொழிலாளர்களால், மிகப் பெரிய டாடா நிறுவனத்தை எவ்வாறு பணிய வைக்க முடிந்தது? இந்த வெற்றியை எப்படிச் சாதிக்க முடிந்தது?

**அ**க்தர்கான், ஆனந்த் தால்வி ஆகிய தொழிலாளி வர்க்கத் தியாகிகளை உங்களுக்கு நினைவிருக்கிறதா? கடந்த ஆண்டு அக்டோபர் 3-ஆம் நாளன்று இவ்விரு தொழிலாளர்களும் மும்பை வர்த்தக மையத்திலுள்ள டாடா தலைமையகத்தின் எதிரே, தங்களை வேலைநீக்கம் செய்து வாழ்வைப் பறித்த டாடா நிறுவனத்துக்கு எதிராக முழக்கமிட்டபடியே, தம்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டுக் கொண்டு எரிந்து விழுந்து மாண்டனர். தம்மை தீயிட்டுக் கொண்டு வர்க்கப் போராட்டத் தீயை மூட்டியை அத்தொழிலாளர்களின் தியாகத்தைப் போற்றியும் கொலைகாரன் டாடாவின் கொடுஞ்செயலை அம்பலப்படுத்தியும் பு.ஜ. இதழ் செய்தியாகப் பதிவு செய்தது. (பு.ஜ. நவம்பர், 2003)

அக்தர்கான், ஆனந்த் தால்வி உள்ளிட்டு டாடா மின்சார நிறுவனத்தின் (TPC) கட்டுமானத் துறையில் பணியாற்றிய தொழிலாளர்களில் 70 பேரை 1996-இல் டாடா நிறுவனம் வேலை நீக்கம் செய்து வீதியில் வீசியெறிந்தது. இவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அல்ல; 4 முதல் 20 ஆண்டுகள் வரை பணியாற்றிய நிரந்தரத் தொழிலாளர்கள். கட்டுமானப் பணிகள் நிறைவேறியதால், தேவைக்கு அதிகமாக உள்ள தொழிலாளர்களை வெளியேற்றுவதாக டாடா நிறுவனம் நியாயம் கற்பித்தது. இக் கொடுஞ்செயலை எதிர்த்து வேலையிழந்த தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துப் போராடி வந்தனர்.

ஏழு ஆண்டுகளாகியும் வழக்கில் எந்த முன்னேற்றமுமில்லை. டாடா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகார பூர்வ தொழிற்சங்கமோ டாடாவின் கைக்கூலி - கருங்காலி சங்கமாக இருந்தது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருப்பதாக நாடகமாடிக் கொண்டே தொடர்ந்து துரோகமிழைத்து வந்தது. இந்நிலையில், இத் தொழிற்சங்கம் தொழிலாளர்களை மோசடி செய்து, நிர்வாகத்துடன் இரகசிய உடன்பாடு செய்து கொண்டு, 70 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை அங்கீகரித்து ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட தீர்மானித்தது. 2003 அக். 3-ஆம் நாளன்று இத்துரோக ஒப்பந்தம் கையெழுத்தாவதை அறிந்த பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், டாடா தலைமையகம் எதிரே திரண்டு தமது வாழ்வைப் பறித்த டாடாவுக்கு எதிராகவும் தொழிற்சங்கத் துரோகிகளுக்கு எதிராகவும் முழங்கினர்.

திடீரென அக்தர்கானும், ஆனந்த் தால்வியும் தம்மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு ''கொலைகாரன் டாடா ஒழிக!'' என்று முழங்கிக் கொண்டே தீயிட்டுக் கொண்டனர். அவர்களது திட்டம் இதர தொழிலாளர்களுக்கு முன் கூட்டியே தெரியாததால், அதைத் தடுக்க முடியவில்லை. தீயை அணைத்து அவர்களைக் காப்பாற்ற தொழிலாளர்கள் முயன்றனர். ஆனால், தீயை அணைக்க தண்ணீர் தரக் கூட டாடா நிறுவனம் மறுத்துவிட்டது. தமது வாகனத்தில் அவர்களை மருத்துவமனை கொண்டு செல்லவும் மறுத்தது. காவலாளியைக் கொண்டு தலைமையக வாயிற்கதவை மூடுமாறு உத்தரவிட்டது. டாடாவின் இரக்கமற்ற இக்காட்டுமிராண்டித்தனத்தைக் கண்ட தொழிலாளர்களும், பொதுமக்களும் டாடா தலைமையகக் கட்டிடத்தின் மீது கல்லெறிந்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தினர்.

மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஆனந்த் தால்வி அதேநாளில் மரணமடைந்தார். அக்தர்கான் 8 நாட்கள் உயிருக்குப் போராடி சிகிச்சை பலனின்றி மாண்டு போனார். பத்திரிகைகள் டாடா நடத்திய இக்கொலையை அம்பலப்படுத்தின. மனித உரிமை அமைப்புகள் டாடா மீது குற்றஞ்சாட்டி கண்டனம் தெரிவித்தன. வேலையிழந்த தொழிலாளர்கள், தமது முன்னணித் தோழர்களை இழந்த நிலையில் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சூழலில்தான் ''ஜாக்ருத் காம்கார் மன்ச்'' (JKM) என்ற வர்க்க உணர்வுள்ள அமைப்பு, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை அணிதிரட்டி போராட்டப் பாதையை வகுத்துக் கொடுத்து தோளோடுதோள் நின்று போராடியது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அதிகாரபூர்வ தொழிற்சங்கத்திலிருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டு, டாடா மின்திட்ட தொழிலாளர் போராட்ட சங்கம் (TPPKSS) என்ற புதிய சங்கத்தைத் தொடங்கினர். வெறுமனே வழக்கு மன்றத்தை மட்டும் நம்பியிராமல், நேரடியாகக் களத்தில் இறங்கிப் போராடத் தீர்மானித்தனர்.

டாடாவின் சட்டவிரோத வேலை நீக்கத்துக்கு எதிராக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தொடுத்துள்ள வழக்கோ சாதாரணமானது. அதுவும் ஏழாண்டுகளாக ஆமை வேகத்தில் தான் நகர்கிறது. இந்த வழக்குக்காக ஏற்கெனவே பணத்தையும் நேரத்தையும் இழந்து அவர்கள் சோர்ந்து போயிருந்தனர். மேலும், பாதிக்கப்பட்ட 70 தொழிலாளர்களில் ஏறத்தாழ 30 பேர் பிழைப்புக்காக வெளியூர் சென்று விட்டதால் போராட்டத்தில் நேரடியாகப் பங்கேற்க

முடியாத நிலைமை நீடித்தது. எஞ்சியுள்ள தொழிலாளர்களோ மிகச் சிறிய சக்தி. டாடாவோ மிகப் பெரிய தரகு முதலாளி. இந்நிலையில், டாடாவை எதிர்த்துப் போராட வேண்டுமானால், தமது நியாயமான போராட்டத்துக்கு உழைக்கும் மக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டியது மிக முக்கியமான அவசரக் கடமை என்பதைத் தொழிலாளர்கள் உணர்ந்தனர்.

40 தொழிலாளர்களும் தமது மனைவி, குழந்தைகள், பெற்றோர் - உறவினருடன் திரண்டு தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கினர். இதர தொழிற்சங்கங்களின் தலைவர்களை நேரில் சந்தித்து, தமது போராட்டத்துக்கு ஆதரவு திரட்டினர். தலைவர்கள் மட்டுமின்றி, ஒவ்வொரு ஆலையிலும் ஒவ்வொரு பிரிவிலுமுள்ள தொழிற்சங்க முன்னோடிகளைச் சந்தித்து ஆதரவு கோரியதோடு, ஆலை வாயில்களில் துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகளுடன் தெருமுனைக் கூட்டங்களை நடத்தினர். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களது குழந்தைகள், தொழிலாளர் குடியிருப்புகளுக்குச் சென்று வீடுவீடாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இதுதவிர, பொதுமக்கள் கூடுமிடங்களில் தெருமுனைக் கூட்டங்கள், பேருந்து-ரயில்களில் துண்டுச் சுவரொட்டிகள், ரயில் நிலையங்களில் வாயிற் கூட்டங்கள் என பலவழிகளிலும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்தோடு மேற்கொண்ட இப்பிரச்சாரம் இலட்சக்கணக்கான மக்களைச் சென்றடைந்தது.

தொடர்ச்சியான இப்பிரச்சாரத்தின் விளைவாக, தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களது போராட்ட நியாயத்தை உணரத் தொடங்கினர். தமது பிரதிநிதிகளை அனுப்பி அடையாள ஆதரவு தெரிவித்து வந்த இதர தொழிற்சங்கங்கள், படிப்படியாக திரளான தொழிலாளர்களுடன் இப்பிரச்சார இயக்கங்களில் பங்கேற்கத் தொடங்கின. தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக் குழுவினரிடம் தியாகிகளான ஆனந்த் தால்வி - அக்தர்கானின் துணைவியாரும் பெற்றோரும் நேரில் சென்று போராட்டத்தின் நியாயத்தை விளக்கி ஆதரவு கோரினர். இதன் தொடர்ச்சியாக, கடந்த மே நாளன்று தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி, பாதிக்கப்பட்ட டாடா தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கிப் போராட தீர்மானம் நிறைவேற்றி, தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தது.



டாடா மின்சார நிறுவனத்திற்கு எதிராகப் போராடிய தொழிலாளர்களின் குழந்தைகள், தங்கள் தந்தையின் பெயர், அவரின் வேலை பற்றிய விவரங்களை அட்டையில் எழுதி வைத்துக் கொண்டு, டாடா தலைமை அலுவலகத்தைச் சுற்றி வளைத்து நடத்திய ஆர்ப்பாட்டம்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக துண்டுப் பிரசுரங்கள் - வெளியீடுகளுடன் தெருமுனைக் கூட்டங்களை நடத்தியதோடு, மும்பையின் பல்வேறு பகுதிகளிலும் நேஷனல் ரயில்வே யூனியன் பொதுக் கூட்டங்களை நடத்தியது. ரூ. 10-க்கு நன்கொடை ரசீதுகளை தொழிலாளர்களிடம் வினியோகித்து, அவர்கள் மூலம் ரூ. 1.5 லட்சம் திரட்டி, தியாகிகளான தொழிலாளர் குடும்பத்துக்கு உதவியது. வீட்டு வாடகை தரமுடியாததால் வெளியேற்றப்பட்ட தியாகி அக்தர் கான் குடும்பத்துக்கு, தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் ஒரு குடிசையை வாங்கிக் கொடுத்து ஆதரவாக நின்றது. இது வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களின் முன்முயற்சியையும், தொழிலாளர் வர்க்க ஒற்றுமையையும் நிரூபித்துக் காட்டி, போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது.

மும்பையில் உலக சமூக மன்றக் கூட்டத்துக்கு மாற்றாக நடத்தப்பட்ட மும்பை எதிர்ப்பியக்க கூட்டத்தில் பங்கேற்ற சட்டிஸ்கார் முக்தி மோர்ச்சா சங்கத்தினர், தியாகிகளான ஆனந்த் தால்வி - அக்தர் கான் ஆகியோர் தீயிட்டுக் கொண்டு மாண்டு போன இடத்தில் திரண்டு அஞ்சலி செலுத்தி, இத்தியாகிகளின் குடும்பத்துக்கு நேரில் சென்று இரங்கல் தெரிவித்தனர். இதனால் அவர்கள் ஊருக்குத் திரும்பிச் செல்ல ரயில் கிடைக்காமல் தங்கிச் செல்ல நேர்ந்தபோது, பாதிக்கப்பட்ட டாடா தொழிலாளர் குடும்பங்கள் அவர்களுக்கு சோற்றுப் பொட்டலங்களைத் தயாரித்துக் கொடுத்து தமது வர்க்க ஒற்றுமையை வெளிப்படுத்தினர். போலீசு தலையீட்டால் சட்டிஸ்கார் தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்த முடியாத நிலையில், மும்பை விக்டோரியா ரயில் நிலைய பிளாட்பாரத்திலேயே டாடா தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்தி பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

மும்பையில் நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்பியக்கக் கருத்தரங்கில், டாடா தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், கொலைகாரன் டாடாவை அம்பலப்படுத்தியும், ம.க.இ.க. எழுச்சிமிகு கலைநிகழ்ச்சியை நடத்தி போராட்ட உணர்வூட்டியது. தஞ்சையில் நடந்த தமிழ் மக்கள் இசைவிழாவில் தியாகி- அக்தர்கானின் துணைவியார் அமீனாவை அழைத்து வந்து, டாடா தொழிலாளர்களின் நீதியான போராட்டத்தை விளக்கி தமிழக மக்களிடம் ஆதரவு திரட்டியது.

இத்தகைய விரிவான வீச்சான பிரச்சாரம் உழைக்கும் மக்களிடம் வர்க்க உணர்வையும் ஒற்றுமையையும் வளர்த்ததோடு, கொலைகார டாடாவை மேலும் அம்பலப்படுத்தி தனிமைப் படுத்தியது. டாடாவுக்கு எதிரான பொதுக் கருத்தும் போராட்டமும் வலுக்கத் தொடங்கியதும், பீதியடைந்த டாடா

www.padippakam.com



டாடா மின்சார நிறுவனத் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்துப் பல்வேறு தொழிற்சங்கங்கள் டாடா தலைமை அலுவலகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்.

நிறுவனம், தியாகிகளான தொழிலாளர் குடும்பங்களுக்கு தனிப்பட்ட முறையில் கருணைத் தொகை வழங்குவதாக அறிவித்து மனிதாபிமான நாடகமாடியது. வர்க்க உணர்வுள்ள அக்தர்கான் - ஆனந்த் தால்வியின் குடும்பத்தினர் இதை ஏற்க மறுத்து, அனைத்துத் தொழிலாளர்களுக்குமான ஒப்பந்தத்துடன் சேர்த்துதான் இதைப் பெறுவோம் என்று உறுதியாக நின்றனர்.

டாடா நிறுவனம், வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் பணிக்காலம் முடிந்துவிட்டதாலேயே அவர்களை வேலையிலிருந்து விலக்கியதாக நாளேடுகளில் விளம்பரம் செய்து புளுகியபோது, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் தமது பணிக்கால விபரங்களுடன் தாம் ஏய்க்கப்பட்ட விபரத்தை பெரிய தட்டிகளில் எழுதி தமது கழுத்தில் கட்டிக் கொண்டு தெருமுனைக் கூட்டங்களை நடத்தினர். டாடா தலைமையகம் அருகே, ஊர்வலம் - ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலும் அதையும் மீறி பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் குழந்தைகள் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். டாடா நிறுவனம், தனது தலைமையகம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு தடைவிதிக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தபோது, அதை அம்பலப்படுத்தி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் திரண்டு தியாகிகளின் உருவப்படங்களை ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அதை போலீசோ, டாடாவோ, நீதிமன்றமோ தடுக்க முடியவில்லை.

ஒரு மராத்தி செய்தித்தாள், டாடாவுக்கு விசுவாசமாக ஒரு பொய்ச் செய்தியை வெளியிட்டபோது, தொழிலாளர்கள் திரண்டு அப்பத்திரிக்கை அலுவலகத்தை முற்றுகையிட்டு தலைமைச் செய்தியாளரிடம் வாதிட்டனர். தியாகிகளான இரு தொழிலாளர்களின் துணைவியர் சார்பில் மறுப்பு வெளியிட்டு மன்னிப்பு கோராவிடில் பத்திரிக்கை அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் செய்வோம் என்று எச்சரித்தனர். தொழிலாளர்களின் ஒற்றுமையையும் போர்க்குணத்தையும் கண்டு மிரண்ட அப்பத்திரிக்கை, வேறு வழியின்றி மறுப்பை வெளியிட்டு மன்னிப்பு கேட்டது.

தேர்தல் நேரத்தில் தால்வி, கான் ஆகிய தியாகிகள் குடும்பத்தாரின் ஓட்டு யாருக்கு என்று பத்திரிக்கைகள் பரபரப்பூட்டின. வர்க்க உணர்வுள்ள அத்தொழிலாளர் குடும்பங்கள், ''எந்த ஓட்டுக் கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம். எங்கள் ஓட்டு, போராட்டத் தீயை மூட்டிய தியாகிகளுக்குத்தான். ஏனெனில், அவர்கள் இன்றைய தொழிலாளர் போராட்டத்தின் ஓர் அங்கம்'' என்று உறுதியாகக் கூறின.

தேர்தலுக்குப் பின்னர், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கக் கோரி மும்பை தொழிலாளர்கள் குடும்பத்தோடு திரண்டு முதல்வர் மாளிகையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் பிறகு மாநிலத் தொழிற்துறை அமைச்சர் முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். ஆனால் டாடா நிர்வாகமோ, இப்பேச்சு வார்த்தையைச் சிதறடிக்க கீழ்த்தரமான முயற்சிகளில் ஈடுபட்டு அம்பலப்பட்டது. அதிகாரபூர்வ சங்கத்துடன்தான் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என்று சட்டவாதம் பேசி முறுக்கிக் கொண்டது.

இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட தொழிலாளர் குடும்பத்தினர் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரமுகர்களின் வீடுகளுக்குச் சென்று தமது வாழ்வு சூறையாடப்பட்டதையும், போராட்டத்தின நியாயத்தையும் விளக்கினர். தியாகிகளான தால்வி, கான் ஆகியோரது துணைவியரும் பெற்றோரும் பலமுறை நேரில் சென்று தமது அவலத்தை எடுத்துக் கூறினர். இதனால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரமுகர்களின் குடும்பத்தார், தமது குடும்பத் தலைவர்களிடம் இப்போராட்டத்தின் நியாயத்தை உணர்த்தி தீர்வுக் காணச் சொல்லி வலியுறுத்தினர். வேறுவழியின்றி அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத்தின் தலைவர்கள், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆதரவாக நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக் கொண்டனர்.

இது டாடா தொழிலாளர்களுக்கு மட்டுமே ஏற்பட்டுள்ள பாதிப்பு அல்ல; நாளை நமக்கும் நடக்கவுள்ள அபாயம் என்பதை உணர்ந்த மும்பை தொழிலாளர்கள், ஜூன் 11 அன்று டாடா தலைமையகம் எதிரே நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்றனர். ரயில்வே, துறைமுகத் தொழிலாளர்கள், வோல்டாஸ், டி.எச்.எல், முகுந்த் ஸ்டீல்ஸ், டாடா பொறியியலாளர் குழுமம், ரிலையன்ஸ், இந்துஸ்தான் லீவர் முதலான நிறுவனங்களின் தொழிலாளர்கள், அரசு போக்குவரத்து மற்றும் மின்வாரிய ஊழியர்கள், ஹெச்.எம்.எஸ்; சி.ஐ.டி.யு.; ஏ.ஐ.டி.யு.சி சங்கத்தினர் என பல்லாயிரக்கணக்கானோர் நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், கொலைகார டாடாவை மேலும் அம்பலப்படுத்தி போராட்டத்துக்கு வலு சேர்த்தது.

மும்பை தொழிற் தகராறு சட்டத்தின்படி, அதிகாரபூர்வமாக - அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தைத் தவிர வேறு எந்த சங்கத்துடனும் நிர்வாகம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், தொழிலாளர் போராட்டத்தின் வீச்சு காரணமாகவும், கொலைகார டாடா நிர்வாகம் மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போனதாலும், பாதிக்கப்பட்ட டாடா மின்திட்ட தொழிலாளர் போராட்ட சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தது.

மாநில முதல்வர் உத்தரவின் பேரில், தொழிலாளர் நலத்துறை



படிப்பகம்

www.padippakam.com

அமைச்சரின் முன்னிலையில் நடந்த இப்பேச்சுவார்த்தையில் டாடா நிறுவனத்தின் உயர் நிர்வாக அதிகாரிகளும் இயக்குனர்களும் ஓடோடி வந்து கலந்து கொண்டனர். பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சார்பில் கையளவேயான முன்னணியாளர்களே பங்கேற்றனர். பேச்சு வார்த்தையின் இறுதியில் பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு நிவாரணம், தியாகிகளான தொழிலாளர் குடும்பங்களுக்கு நட்டாஈடு உள்ளிட்டு ஏறத்தாழ ரூ. 2 கோடியைத் தர — 70 தொழிலாளர்களுக்கு மொத்த நிவாரணமாக ரூ. 1.85 கோடியும் தியாகிகளான இரு தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 7.5 லட்சம் வீதம் மொத்தம் ரூ. 15 லட்சமும் தர ஒப்புக் கொண்டு டாடா நிர்வாகம் ஜூன் 21-இல் கையொப்பமிட்டது.

இது, ஒன்றுபட்ட தொழிலாளர் இயக்கத்தின் மகத்தான வெற்றி. நட்ட ஈடு - நிவாரணம் என்கிற பொருளாதாரக் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றியாக இதைக் குறுக்கி சுருக்கிவிட முடியாது. இது, மிகப் பெரிய டாடா நிறுவனத்தை பணிய வைத்த தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மிகச்சிறிய சக்தியாக இருந்தபோதிலும், மிகப்பெரிய மக்கள் திரள் போராட்டமாக இதை வளர்த்தெடுத்தார்கள். வெறும் சட்டவாத வழக்கை மட்டும் நம்பிராமல், தொடர்ச்சியாக தமது குடும்பத்தோடு வீதியில் இறங்கிப் போராடி, உழைக்கும் மக்களின் ஆதரவோடு போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். ஓட்டுக் கட்சிகளையும், துரோக தொழிற்சங்கங்களையும் புறக்கணித்து, கோடிக்கால் பூதமான தொழிலாளி வர்க்க ஒற்றுமையிலும், வலிமையிலும் நம்பிக்கை வைத்துப் போராடினர். கடந்த 20 ஆண்டுகளாக தொழிற்சங்க இயக்கம், சட்டவாத வழக்கிலும் துறை சார்ந்த பொருளாதாரப் போராட்டங்களிலும் முடங்கி தேக்கமடைந்து விட்ட நிலையில், தொழிலாளர் போராட்டத்தை விரிவான மக்கள்திரள் இயக்கமாக வளர்த்து முன்னெடுத்துச் சென்று ஒரு புதிய திசைவழியைக் காட்டியுள்ளார்கள், மும்பை தொழிலாளர்கள். டாடா தொழிலாளர்களின் போராட்டத்திலிருந்து படிப்பினைகளைப் பெற்று தொழிலாளி வர்க்கம் புதிய பாதையில் போராடத் தொடங்கிவிட்டால், டாடா - பிர்லாவை மட்டுமல்ல; உலகின் எந்தவொரு ஆதிக்க சக்தியையும் தம் காலடியில் வீழ்த்திட முடியும்.

● மனோகரன்

15-ஆம் பக்கத் தொடர்ச்சி

காரணமே ஸ்டாலினையும் கம்யூனிசத்தையும் அவதூறு செய்ததுதான். வியத்நாமிலிருந்து அமெரிக்கா விரட்டப்பட்ட பின்னரும், ''மறுபடியும் வியத்நாம் மீது அமெரிக்கா போர் தொடுக்க வேண்டும்'' என்று அறைகூவல் விட்டவர் சோல்ஜெனிட் சின். அவருடைய யோக்கியதைக்கு இதற்கு மேல் சான்று தேவையா?

ஸ்டாலினைப் பற்றிய குருசேவின் விமர்சனங்களாக மதன் எழுதியுள்ளவைகளை ஒரு வாதத்திற்கு உண்மை எனக் கொண்டாலும், அதிலிருந்து குருசேவ் எத்தகைய இழிந்த நபர் என்பது தான் துலக்கமாகத் தெரிகிறது. ஸ்டாலின் மீதான குருசேவின் தாக்குதல் வெறும் தனிநபர் விவகாரமல்ல; ''லெனின், ஸ்டாலின் காட்டிய வழியில் இனி உலக கம்யூனிஸ்டுகள் புரட்சி செய்யத் தேவையில்லை. தேர்தலில் நின்றால் போதும். அமெரிக்காவை எதிர்க்காமல் சமாதான சகவாழ்வு நடத்தலாம்'' என்ற குருசேவின் துரோகக் கொள்கையையும், ஸ்டாலின் மீதான அவதூறையும் சீனத் தலைவர் மாவோ உட்பட பல உலக கம்யூனிஸ்டுகள் எதிர்த்தனர். இந்த உண்மையை வசதியாக மறைத்துவிட்டு உலக கம்யூனிஸ்டு இயக்கமே ஸ்டாலினைத் தூற்றுவது போல சித்தரிக்கிறார் மதன்.

குருசேவ் காட்டிய பாதையில் சென்ற ரசியா இன்று முதலாளித்துவ நாடாகிவிட்டது. மீண்டும் பிச்சைக்காரர்கள், பட்டினி, வேலையின்மை, விபச்சாரம் அனைத்தும் அங்கே தலைவிரித்தாடுவதை முதலாளித்துவ பத்திரிகைகளே எழுதுகின்றன. மொத்தத்தில் 'ஜனநாயகம்' மீண்டும் நிலைநாட்டப்பட்டுவிட்டது.

பழைய கம்யூனிஸ்டு அரசின் ஆவணக் காப்பகங்களைத் திறந்தால் பல திகிலூட்டும் உண்மைகள் வெளிவரும் என அமெரிக்காவின் கூலி எழுத்தாளர்கள் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருந்தார்கள். ஜெம்ஸ்கோவ் டெளஜின், எழவன்ஜூக் என்ற ருசிய வரலாற்றாசிரியர்கள் ரசிய கம்யூனிஸ்டு கட்சியின் ஆவணக் காப்பக ஆதாரங்களை ஆராய்ந்து 1990 முதல் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதினார்கள். ஸ்டாலின் ஆட்சிக் காலம் பற்றி கூறப்பட்டவையெல்லாம் புளுகு மூட்டைகள் என்பதையே இவை நிரூபித்தன. எனவே, இவை மேல்நாட்டு பத்திரிகைகளால் இருட்டடிப்பு செய்யப்பட்டன.

மிச்சமிருப்பவை அமெரிக்கப் பொய்கள் மட்டும்தான். வாசகர்கள் இதைப் புரிந்து கொள்ள அதிகம் சிரமப்பட வேண்டாம். இராக்கில் நடப்பதைப் பார்த்தால் போதும். பேரழிவு ஆயுதங்களை சதாம் உசேன் குவித்து வைத்திருப்பதாகக் கூறி பல லட்சம் இராக் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது அமெரிக்கா. இப்போது பேரழிவு ஆயுதங்கள் எதுவும் இல்லை என்பதை அமெரிக்க அரசே ஒப்புக் கொண்டு விட்டது. இருந்தாலும் இராக்கை ஆக்கிரமிக்காமலிருந்தால் சதாம் அணுகுண்டு தயாரித்திருப்பார் என்று விளக்கம் சொல்கிறார்கள் புஷ்ஷும், டோனி பிளேயரும்.

ஒரு சதாமை வீழ்த்தவே இவ்வளவு புளுகு! தன்னுடைய முதலாளித்துவ சாம்ராஜ்ஜியத்தையே ஆட்டம் காணச் செய்த ஸ்டாலினுக்கும் கம்யூனிசத்துக்கும் எதிராக எவ்வளவு புளுகியிருப்பார்கள் என்பதை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம். கறுப்பு வெள்ளையில் அச்சடித்தவைகளையெல்லாம் 'ஆதாரங்கள்' என்று மதன் கூறுவாரேயானால், அவர் எழுதியுள்ளபடி செத்துப் போன டால்ஸ்டாய் 20 வருடம் கழித்து உயிர்த்தெழுந்ததாகவும் நாம் நம்ப வேண்டியிருக்கும்.

மதன் ஆவியுலகக் கதைகளை எழுதலாம். அது அவருக்கும் நல்லது; வரலாறுக்கும் நல்லது. அல்லது பழங்கதைகளை எழுதவதற்குப் பதிலாக நிகழ்காலம் பற்றி எழுதலாம். புஷ், மோடி, அத்வானி போன்றோர் பற்றி அசைக்க முடியாத வீடியோ ஆதாரங்களே இருக்கின்றன. யார் கண்டது, ''மனிதனுக்குள் ஒரு தெய்வம்'' என்ற தலைப்பில் இவர்களைப் பற்றி எழுதுவதற்கு ஆய்வு செய்து கொண்டிருப்பார் மதன்.

'இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்க அதிபர்களாக பதவி வகித்தவர்கள் அனைவருமே போர் குற்றவாளிகளாக கருதி தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தாம்; அவ்வளவு கொடூரமான கொலைகளைப் புரிந்திருக்கின்றனர்' என்கிறார், அமெரிக்கப் பேராசிரியர் நவோம் சோம்ஸ்கி.

இன்றைய உலகின் மிக மோசமான மனித மிருகங்களான அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், பிரிட்டிஷ் அதிபர் டோனி பிளேயர் ஆகியோர் ஈராக்கில் நடத்தி வரும், (குறிப்பாக அபு-கிரைப் சிறைச்சாலைக் குற்றங்கள்) ஆபாச - வக்கிர, வெறித்தன நடவடிக்கைகள் கண்டு உலகமே அதிர்ச்சியுற்றிருக்கும் நிலையில், தோழர் ஸ்டாலினைப் பற்றி அவதூறு செய்து அதற்கு ஈடுகட்டவும் மூடி மறைக்கவும் எத்தணிக்கிறார், மதன். ●


படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஓட்டுண்ணிகளே தலைவர்களாக...

ஓட்டுப் பொறுக்கி அரசியலில் குதித்த தொல். திருமாவளவன் மற்றும் கிருஷ்ணசாமி தலைமையிலான அமைப்புகளின் அரசியல் சந்தர்ப்பவாதங்களைச் சாடி புதிய ஜனநாயகம் (மார்ச் 2004) பத்திரிகையில் எழுதியிருந்த கருத்துக்கள் - விமர்சனங்கள் ஒன்றுக்குக் கூட இதுவரை அவர்கள் தரப்பிலிருந்து பதில் கிடையாது. அதற்குப் பதிலாக அவதூறுகளும், வசவுகளும் பொய்யான கிசுகிசுக்களுமே பரப்பப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, தொல்.திருமாவளவனை ''அவன்'', ''இவன்'' என்று ஏகவசனத்தில் புதிய ஜனநாயகம் எழுதிவிட்டதாக திருவாளர் இன்குலாப் அவர்கள் ''உலகத் தமிழர் சக்தி'' (செப்.2004) என்ற ஒரு பத்திரிகைக்கு பேட்டி கொடுத்துள்ளார். புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய பத்திரிக்கைகள் மக்கள் விரோதமானவை, குப்பைகள்; ஆகவே அவற்றைப் படிப்பதில்லை என்று அதே பத்திரிக்கைப் பேட்டியில் கூறியிருக்கும் திருவாளர் இன்குலாப் அவர்களுக்கு, திருமாவளவனை அவன், இவன் என்று ஏகவசனத்தில் ''எழுதியிருப்பது'' மட்டும் எப்படித் தெரியும்?

''புதிய ஜனநாயகம் அவ்வாறு எங்கே எழுதியிருக்கிறது, காட்டுங்கள்!'' என்று கேட்டபோது, ''அப்படி எழுதவில்லையா, சொன்னார்களே!'' என்று வியப்புத் தெரிவித்திருக்கிறார், திருவாளர் இன்குலாப் அவர்கள். ஆக, இப்படி ஒரு பொய்ச் செய்தி பரப்பப்படுகிறது. பேராசிரியர் இன்குலாப் போன்றவர்கள் அதை அப்படியே நம்பி, தம் பங்குக்குப் பரப்புகிறார்கள்.

''வாழைப்பழம் வயிற்றுக்குள் போய் வெளியே வரும்போது மலமாகத்தான் இருக்கும். அதைப் போல நானே இருந்தாலும் இந்தத் தேர்தல் பாதைக்குள் போனால் அயோக்கியனாகத்தான் வெளியே வரவேண்டும்'' என்று தேர்தல் புறக்கணிப்பு அரசியல் நடத்தி வந்தபோது, தொல். திருமாவளவனே கூறியதைத் தான், இப்போது அவருக்கே பொருத்தி கதைபாணியிலே புதிய ஜனநாயகம் எழுதியிருந்தது. அந்தக் கதைபாணி உவமானம் முடிந்து அரசியல் விமர்சனம் தொடரும்போது, ''இந்தப் பேர்வழி ஒரு கற்பனைக் கதைப் பாத்திரம் அல்ல. நிஜத்தில் வாழும் மனிதர். வேறு யாருமல்ல அவர்தான் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன்'' என்று உரிய மரியாதையுடன்தான் பு.ஜ. எழுதியிருக்கிறது.

பு.ஜ.வின் அரசியல் கருத்துக்கள் - விமர்சனங்களை மறுக்கத் திராணியற்ற நிலையில்தான் அவர்கள், இப்படிப் பட்ட பொய்களைப் பரப்புகிறார்கள். மேலும் ஆத்திரமுற்று ''அதிமேதாவி சொறிநாய்'' என்றும் ''நக்சல்பாரிக் கும்பல்'' என்றும் வசவுகளை திருமாவளவன் பத்திரிக்கை எழுதியிருக்கிறது. ''புதிய ஜனநாயகம்'' சார்ந்த அமைப்புகளை மட்டுமல்ல; நக்சல்பாரிப் புரட்சியாளர்கள், புரட்சிகர அமைப்புகள் ஆகிய அனைவர்மீதும் இதே வசவுகளை வாரி இறைத்திருக்கிறது.

பிற அரசியல் இயக்கம் மீது நம்பிக்கையிழந்து அடக்குமுறையை எதிர்கொண்ட சூழலில், ''சேரி மக்களே கொஞ்சம் பொறுத்திருங்கள், நக்சல்பாரிகளின் இடி முழக்கம் கேட்டுவிட்டது; புரட்சி வந்துவிட்டது. அப்போது எல்லாப் பிரச்சினையும் தீரும் என்று வாய்ச்சவடால் அடித்தார்கள். சேரிமக்கள் நம்பி சேரியிலே, 'அத்தகைய புரட்சிக்காரர்களுக்கு' அடைக்கலம் கொடுத்தார்கள். சேரிக் குழந்தைகளுக்கு உணவு இல்லையென்றாலும் 'புரட்சிக்காரர்'களுக்கு சோறு போட்டுக் காத்தார்கள். ஆனாலும் எந்தப் புரட்சியும் நடக்கவில்லை. சேரி மக்கள் வழக்குகளையும், படுகொலைகளையும் சந்தித்துக் கொண்டே இருந்தனர். எல்லா நம்பிக்கை கதவுகளும், மூடப்பட்டன. ஆனாலும் 'புரட்சிக்காரர்கள்' அதிமேதாவி நாய் போல இன்னும் குரைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்தப் பயனும் இல்லை'' என்று எழுதுகிறது திருமாவளவனின் தாய் மண். அவரது ''அடங்க மறு! அத்துமீறு!'' என்ற கலகக் குரலின் எதிரொலியாக ''அடித்தால் திருப்பி அடி'' என்று சேரி இளைஞர்கள் எதிரொலித்த முழக்கம் காரணமாக ''சேரியெல்லாம் விடுதலைச் சிறுத்தை

தனது பிறந்தநாளை தமிழர் எழுச்சி நாளாக அறிவித்துக் கொண்டாடிய திருமாவளவனுக்கு, பார்ப்பன - பாசிச ஜெயாவின் இரகசியத் தரகன் நடராசன் கருப்பட்டி வெல்லம் ஊட்டி விடுகிறார்: தலித் அரசியலின் சீரழிவுக்குச் சாட்சி.





படிப்பகம்

www.padippakam.com

களாய் அணிவகுத்து அரசியல் கட்சிக் கொடிகளெல்லாம் இறக்கப்பட்டு விடுதலைச் சிறுத்தைகள் கொடிகள் ஏற்றப்பட்டன. இதனால் புரட்சிப் பேசிப் பொறுக்கித் தின்ற கும்பல் விரட்டப்பட்டன. அவர்கள் பிழைப்பில் மண் விழுந்தன'' என்றும் தாய் மண் எழுதுகிறது.

அந்தக் கோபமும் பொச்சரிப்பும் காரணமாகத்தான் விடுதலைச் சிறுத்தைகள் மீதும் அவர்களின் வழிகாட்டி திருமாவளவன் மீதும் பாய்கிறோம் என்று தாய்மண் புளுகுகிறது. நமது விமர்சனங்கள் எதற்கும் பதில் கூற முடியாத நிலையில் அது கண்டுபிடித்திருக்கும் வளமான கற்பனைக் காரணம் தான் இது. இதோடு திரும்பத்திரும்ப இரண்டு வகைப் பொய்களை வீசுகின்றது.

மேலவளவு படுகொலை, கொடியன்குளம் கலவரம், தாமிரபரணி படுகொலைகளுக்குக் காரணமான அரச பயங்கரவாதிகளைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் துப்பில்லாதவர்களாக இருக்கிறார்கள்; பம்மிப் பதுங்குகின்றனர்; ஒன்றும் 'புடுங்கவில்லை'; திண்ணியம் கொடுமைக்காக கண்டன அல்லது எதிர்ப்புக் கூட்டங்களை கூட நடத்தவில்லை; 'அழித்தொழிப்பு' முழக்கம் கொள்கிற 'நக்சல்பாரிகள்' எங்கேயும் சேரிமக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிற மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை - இப்படி ஒரு வகைப் பொய்களை எழுதுகிறது தாய்மண்.

அதேசமயம், ஆதிக்க சாதிவெறியர்களோடு மோதுவதற்கு பதில் நக்சல்பாரிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு 'கடுமையாக' மோதுகிறார்கள்; 'பார்ப்பன பயங்கரவாத' மாநாடுகளை நடத்தி பார்ப்பனத் தலைமையைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள்; தமிழிசை விழாக்களை நடத்தி ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்; நிலமீட்பு செய்து நிலமில்லாதவர்களுக்கு பிரித்துத் தரும், பண்ணையார்களை அழித்தொழிக்கும் ஆந்திர நக்சல்பாரிகளைப் போலன்றி இங்குள்ள நக்சல்பாரிகள் உண்டியல் குலுக்குகிறார்கள், வணிகக் கடைகளை நடத்தி லாபம் பார்க்கிறார்கள், புரட்சி உபதேசம் செய்கிறார்கள் - இப்படி இன்னொருவகைப் பொய்கள்.

இந்தப் பொய்களை மரியாதைக்குரிய இன்குலாப் போன்ற பேராசிரியர்கள் வேண்டுமானால் நம்பலாம். மேலும் ''சேரிகளில் பொறுக்கித் தின்ற நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர், அவர்கள் பிழைப்பில் மண் விழுந்துவிட்டன'' என்பது போன்ற வாசகங்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவை உண்மையும் அல்ல; அரசியல் நோக்கர்கள் நம்பக்கூடியவையும் அல்ல. பொதுவில் சாதியம், தீண்டாமை மட்டுமல்ல, திருமாவளவர்கள் குறிப்பிடும் நிகழ்வுகளில் புரட்சியாளர் என்னென்ன எதிர்வினையாற்றினார்கள் என்பதையும் அறிவர்.

நாம் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, பார்ப்பன - பயங்கரவாத எதிர்ப்பு தமிழிசை விழா ஆகிய இயக்கங்கள் நடத்துவது கூட புனிதப் பாண்டியர்கள், திருமாவளவர்களுக்கு சகித்துக் கொள்ள முடியாததற்கான காரணம் ஒன்றும் புரியாத இரகசியம் அல்ல. ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களுடன் பார்ப்பன நிறுவனங்களுடன் அவர்கள் கொண்டிருக்கும் விசுவாசமே அதற்குக் காரணம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதுமில்லை.

நக்சல்பாரிகள் உண்டியல் குலுக்கியும், புத்தகம் போட்டும் (எப்படிப்பட்ட புத்தகங்கள், என்ன நோக்கத்துக்கு, என்ன விலைக்கு விற்கப்படுகின்றது என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை) ''லாபம் பார்ப்பது'', ''பிழைப்பு'' நடத்துவது ஒன்றும் இழிவல்ல. நாங்களாவது உண்டியலில் காசு போடும் உழைக்கும் மக்களையும், முற்போக்கு நூல்களை வாங்கும் வாசகர்களையும் நம்பி இயக்கம் நடத்துகிறோம். ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்களின் நிதியையும், பார்ப்பன வெளியீட்டகங்களின் தொழிலையும் சார்ந்து நிற்கவில்லை. (பார்ப்பனப் பத்திரிக்கை நிறுவனங்களைச் சார்ந்து இரகசியமாக இயங்கும் விடுதலைச் சிறுத்தைகளின் சிந்தனையாளர் ரவிக்குமார், அவர் மூலமாக திருமாவளவன் அவற்றுடன் உறவு வைத்திருப்பது; இலாபநோக்கத்தோடு தன் நூல்களை வெளியிட்டு விற்பனை செய்வது போன்ற விவரங்களுக்கு தலித் முரசு இதழ்களைப் படிக்கவும்).

## தலித் முரசின் பார்ப்பன முத்திரைக்காகக் காத்திருப்பவர்கள்

தலித்தியம் என்ற பெயரில் கடை விரிக்கப்படும் பிழைப்புவாதத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் புதிய ஜனநாயகம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறது. இதன் காரணமாகவே 'தலித் ஆதரவு அறிஞர்'களும் 'கவிஞர்களும்' எம்மை அவதூறு செய்து வந்திருக்கிறார்கள். தற்போது, இரவிக்குமாரும் திருமாவளவனும் பெரியாரை அவதூறு செய்யத் தொடங்கியவுடனே, இந்த அறிஞர் பெருமக்கள் சிலரிடையே புகைந்து வந்த கோஷ்டித் தகராறு 'அரசியல்' வடிவமெடுத்து விட்டது.

''பெரியார் மீதான அவதூறுகள் - ஒரு எதிர்வினை'' என்ற தலைப்பில் 20.10.04 அன்று சென்னையில் அ.மார்க்ஸ் ஒருங்கிணைத்து நடத்திய கூட்டத்தில் திருமாவளவனை பலர் தைரியமாக விமர்சித்தனர்.

''திருமாவளவன் சங்கராச்சாரியை சந்தித்து விட்டு வந்ததாக செய்தி வந்ததும் - அவர் சந்திக்கவில்லை என்று மட்டும் சொன்னார். அடுத்த நாள், ஏன் அவர் அப்படி சந்திக்கக் கூடாத ஆளா என்ன? என்று கேட்கிறார். இவையாவும் அவருடைய நடவடிக்கைகளை கேள்வி எழுப்பச் செய்கிறது'' என்றார் அ. மார்க்ஸ்.

''திருமாவளவன் மேலே போகப் போக பார்ப்பன எதிர்ப்பு என்பது சிறிதும் இன்றி அவரே ஒரு பார்ப்பானாகி விட்டார்'' என்று குறிப்பிட்டார் கவிஞர் அ. வெண்ணிலா.

''நாங்கள் காஞ்சிபுரத்தில் கருவறை நுழைவு போராட்டம் நடத்த இருந்தபோது, திருமாவளவன் கேட்டார், 'காஞ்சிபுரத்தில் ஏன் நடத்துறீங்க, எத்தனையோ கிராமங்களில் இன்றும் கோயிலுக்குள் நுழைய முடியாத நிலை இருக்கிறது. அங்கே போய் நடத்த வேண்டியது தானே, அதை விட இதுதான் முக்கியமா'? - என்றார்.

கிராமப்புற கோவில்களில் சில ஆதிக்க சாதிவெறியர்கள் சட்டவிரோதமாக கோவிலை தங்கள் பிடிக்குள் வைத்திருக்கிறார்கள். ஆனால், சங்கரமடத்தை சட்டமே பாதுகாக்கிறது. இந்நிலையில் திருமாவளவன் இது போன்ற போராட்டத்தை தடுக்க நினைப்பது- ஏன்? சங்கராச்சாரி திருமாவளவனுக்கு பிரெண்டா என்ன?'' என்று கேள்வி எழுப்பினார் விடுதலை இராசேந்திரன்.

கொசுறு: இந்தக் கூட்டத்தில் ''தலித் முரசு'' ஆசிரியர் புனிதப் பாண்டியன் அமர்ந்திருந்தார். திருமாவளவனை விமர்சித்ததற்காக பு.ஜ. மீது குமுறி வெடித்த கவிஞர் இன்குலாபும் அமர்ந்திருந்தார். ஒருவேளை 'அறிஞர்கள்', 'கவிஞர்'களுக்கு இடம் பார்த்துத்தான் கோபம் வருமோ!

●

www.padippakam.com

**"ஒட்டு மொத்த தமிழ்த் தேசிய இனத்தின் விடிவாக திருமாவளவனைப் பார்க்கிறேன்!" — காசிஆனந்தன்**



தங்களைப் புகழ்ந்து பாடும் கவிஞர்களுக்கு, மன்னர்கள் பொற்காசுகளை அள்ளிக் கொடுத்தார்கள். காலம் மாறிவிட்டதால், திருமாவளவன் கவிஞர் காசி ஆனந்தனுக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

ஆந்திர நக்சல்பாரிகளோடு ஒப்பிட்டு இங்குள்ளவர்களை ஏளனம் செய்யும் இதே திருமாவளவரின் சகபாடிகள்தாம், ஆந்திரப் புரட்சியாளர்களைக் கொச்சைப்படுத்தி அவதூறுகளை பரப்பியர்கள் என்பதை யாரும் மறந்து விடவில்லை. 'அங்கே பிற்படுத்தப்பட்ட சாதிப் பெண்ணைக் காதலித்த தலித் இளைஞரை மக்கள் யுத்தக் குழுவினர் தண்டித்தனர்; தலித்தான கத்தாரால் தான் ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழு இவ்வளவு தூரம் வளர்ந்துள்ளது; ஆனால், அக்குழுவின் தலைமையில் உள்ள மேல்சாதித் தலைமை தலித்துக்களைப் பயன்படுத்திக் கொண்டு தலித் தலைமைக்கு வருவதைத் தடுக்கிறார்கள்' என்றெல்லாம் அவதூறு செய்த அவர்கள், நம்மை இழிவுபடுத்துவதற்காக ஆந்திர நக்சல்பாரிகளின் செயல்களைப் பாராட்டுவது போல எழுதுகின்றனர்.

தொல்.திருமாவளவன், தாழ்த்தப்பட்ட சாதிகளிலேயே தான் பிறந்த ஒரு உட்சாதியின் முழு ஆதரவையும் பெற்றவர் என்று கூறிக் கொள்ள முடியாது. அதற்கே இளைய பெருமாள், செ.கு. தமிழரசன், சக்திதாசன், புதிய பாரதம் மூர்த்தியின் வாரிசு ஜெகன் மூர்த்தியார், கிருஷ்ணப் பறையனார், சாத்தை பாக்கியராஜ், தலித் முரசு, எழுச்சித் தலித் முரசு குழுவினர்கள், லெமூரியன் என்று ஏராளமான போட்டியாளர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். இவர்களைத் தவிர நூற்றுக்கணக்கில் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற தொண்டு நிறுவனங்கள் தனித்தனி தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இருந்தும் - ஜெயலலிதா, கருணாநிதி, வீரமணி போன்றவர்கள் மட்டுமல்ல, சில சினிமா நடிகர்கள் கூட தமிழகத்தின் ஆறுகோடி தமிழர்களுக்கு தானே தலைவர் என்று கூறிக் கொள்வதைப் போல, இராமதாசு 2 கோடி வன்னியர்களுக்கும் தானே தலைவர் என்றும் சேதுராமன் 3 கோடி முக்குலத்தோருக்கும் தானே தலைவர் என்றும் கூறிக் கொள்வதைப் போல, தலித் மக்கள் அனைவருக்கும் தானே முற்று முழுப் பிரதிநிதி என்று திருமாவளவன் உரிமை பாராட்டிக் கொள்கிறார். தாழ்த்தப்பட்ட மக்களிலேயே பள்ளர், அருந்ததியர் ஆகிய வேறு பிற பிரிவினரிடையே துளியும் ஆதரவில்லாத, சிறு அமைப்புகள் கூட பெற்றிராத திருமாவளவன் இப்படிக் கூறிக்கொள்வது வேடிக்கைதான். அதுமட்டுமல்ல, தமிழினத்துக்கே தானே தலைவர் என்று தானே எழுதிக் கையொப்பமிட்டு கடந்த செப். மாதத் தாய்மண் தலையங்கத்தில் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளார்.

ஏகாதிபத்தியத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பார்ப்பன செய்தி ஊடகங்களால் ஊதிப் பெருக்கப்பட்ட திருமாவளவன் தனது துதிபாடிகளின் தனிநபர் வழிபாட்டால் பிரமை தட்டிப் போயிருக்கிறார் என்பது மட்டும் உண்மை. இராமதாசைத் தமிழினப் புரட்சிப் போராளியாக முன்நிறுத்திப் புகழ்

## தனிநபர் துதியும் "தலித்" தலைமையும்

தலைமை என்றால் தனிநபர் தலைமை என்றும் தலித் இயக்கத்துக்குத் தலைமையாக இருக்கும் தன்னை, இனி தமிழ் தேசிய விடுதலை இயக்கத் தலைமையாக நிறுவ வேண்டும் என்றும் தொல்.திருமாவளவனே கையொப்பமிட்டுத் தனது தாய்மண் பத்திரிக்கையில் தலையங்கம் எழுதி இருக்கிறார். இனி சாதிக்காக இரத்தம் சிந்தமாட்டோம்; தமிழைப் பாதுகாக்கவே போராடுவோம் என்று ராமதாசு - சேதுராமன் போன்ற சாதியவாதிகளுடன் திருமாவளவன் கைகோர்த்துக் கொள்வதை இந்தத் தலையங்கத்தின் ஒளியில் பார்க்க வேண்டியுள்ளது.

தொல்.திருமாவளவனின் அரசியல் சந்தர்ப்பவாதங்களுக்கு எதிரான விமர்சனங்கள் எல்லாம் ஒட்டுமொத்த தலித் சமுதாயத்திற்கு எதிரானதென்றும் சித்தரிக்கிறார். ஒரு சமுதாயத்துக்கு இணையாகத் தனிநபரை நிறுத்துவது, அவரது பிறந்தநாளை தலித் எழுச்சி நாளாகக் கொண்டாடுவது, மலர்க் கிரீடம் - வீரவாள், பல பத்துப் பட்டங்கள் என்று ஜெயலலிதா, ராமதாசு பாணியில் நடத்தப்படுகிறது. இந்தத் தனிநபர் துதியை விமர்சித்தால், தலித் ஒருவரின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமை எனச் சித்தரித்து தன் கீழுள்ள சில இளைஞர்களை ஆத்திரங்கொள்ளச் செய்கிறார்.

இவரது தனிநபர் துதி, நாம் சமீபத்தில் சென்னையில் கண்ட ஒரு சுவரொட்டியை நினைவுபடுத்துகிறது. "ஸ்ரீ ஷேடலக்ஷ்மி மஹாயாகம் - தொடங்கி வைப்பவர்: ஆன்மீகச் செம்மல், அன்னதானப் பிரபு, இந்தியாவின் விடிவெள்ளி, வாழும் அம்பேத்கார், உலகப் புகழ் ஸ்ரீமான் மு. ஆதிகேசவன், பி.ஏ., பி.எல். - தேசியத் தலைவர், அகில இந்திய டாக்டர் அம்பேத்கார் எஸ்.சி., எஸ்.டி., நலக் கூட்டமைப்பு" என்று காமராசர் பாணி உடையுடன் கழுத்திலும் இரண்டு கைகளிலும் தடித்த தங்கச் சங்கிலி, மூன்று மூன்று விரல்களில் ஒரு ரூபாய் வில்லை அளவு மோதிரங்களோடு சுவரொட்டியில் காட்சி தந்த மு. ஆதிகேசவன் கூடதான் ஒட்டு மொத்த தலித் சமுதாயத் தலைவன், தன்னை யாரும் விமர்சிக்கக் கூடாது என்று உரிமை கோரலாம்.


படிப்பகம்

www.padippakam.com

பாடிய - அதற்காகக் கொஞ்சமும் வெட்கப்படாத அதே பேராசிரியப் பெருந்தகைகள் - சிந்தனையாளர்கள் - ஆய்வாளர்களுக்கு இப்போது கிட்டியிருக்கும் புதுக் கதாநாயகன் திருமாவளவன். இராமதாசைப் போலவே தனது தன்னுருவை அவராகவே வெளிப்படுத்தும் நாள் வெகுதூரத்தில் இல்லை. பதவிக்காக ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலோடு கைகோர்த்துக் கொண்ட மாயாவதி, இராமவிலாஸ் பாஸ்வானைப் போலவே இந்தத் திருமாவளவன் அதற்காக எதையும் செய்வார் என்பதை சாதியவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஏற்கனவே அடையாளம் காட்டி விட்டார். பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பாசிச பாதந்தாங்கி பச்சோந்தி ஜார்ஜ் பெர்னான்டசுடன் (இவர் விடுதலைச் சிறுத்தைகளுடன் சேர்ந்து இந்துத்துவப் பண்பாட்டை எதிர்ப்பதாகவும் கூறுவார், தேவர் குரு பூசைக்கும் போவார்) சேர்ந்து பொது மேடையில் கை உயர்த்தும் திருமாவளவன், சந்தர்ப்பவாத அரசியலில் இராமதாசையும் விஞ்சி விடுவார் என்பதில் சந்தேகமில்லை. இப்போது திருமாவளவனுக்காக வக்காலத்து வாங்கும் அறிவுஜீவிகள், அப்போது வேறொரு மேய்ச்சல் நிலத்தைத் தேடி ஓடிப்போவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. இடையிலே அவர்களுக்கு மாணவர் நகலக அருணாச்சலம் கிடைத்ததைப் போல, வேறு அரசியல் புரவலர்கள் கிடைக்காமலா போய்விடுவார்கள்?

பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன - பாசிசத்துக்கு எதிராக சொல்லப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் ஒட்டு மொத்த ''இந்து'' சமுதாயத்துக்கு எதிரானது என்பதாகச் சித்தரிப்பது பார்ப்பன இந்துவெறியர்களின் தந்திரமாக உள்ளது. அதைப்போலவே, திருமாவளவன் - கிருஷ்ணசாமியின் அரசியல் சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதத்தை எதிர்த்துத்தான் புதிய ஜனநாயகம் ஏடு தனது விமர்சனங்களை எழுதுகிறது. ஆனால், அவை ஒட்டு மொத்தத் தலித் மக்களுக்கும் எதிரானவை என்று தந்திரமாகத் திருப்பி விடவே திருமாவளவனும், அவரது துதிபாடிகளும் மீண்டும் மீண்டும் எத்தணிக்கிறார்கள். இவ்வாறின்றி புதிய ஜனநாயகத்தின் விமர்சனங்கள் எதற்குமே மறுப்போ, பதிலோ கூறக் கிஞ்சித்தும் முயற்சிக்கவே இல்லை. இப்படிச் செய்வதன் மூலம் புதிய ஜனநாயகத்தின் கருத்துக்களை - விமர்சனங்களை அவர்கள் உறுதிப் படுத்தவே செய்கிறார்கள்.

(முற்றும்)

- ஆசிரியர் குழு.

13-ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்நாடுகள் விவசாயத்திற்கு ஏறத்தாழ 41 இலட்சம் கோடி ரூபாய் மானியமாகவே வழங்க முடியும். நமது நாட்டின் மைய, மாநில அரசுகள் போடும் வரு டாந்திர பட்ஜெட்டைக் கூட்டினால்கூட இந்த மானியத்தை எட்டிப் பிடிக்க முடியாது; பல ஏழை நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கூட இந்த மானியத்தின் பக்கம் நெருங்க முடியாது எனும்பொழுது, அமெரிக்காவும், ஐரோப்பியக் குழுமமும் ஒப்புக் கொண்டுள்ள மானியக் குறைப்பு என்பது வெறும் கண் துடைப்பு நாடகம்தான்!

''விவசாயம்சாரா உற்பத்திப் பொருட்களின் வர்த்தகம்'' தொடர்பாக ஜெனிவாவில் நடந்த விவாதத்தின் பொழுது, ஏகாதிபத்திய நாடுகள் இந்தக் கண்துடைப்பு கருணையைக் கூடக் காட்டவில்லை. விவசாயம் சாராத உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வை 5-லிருந்து 10 சதவீதத்திற்குள் தான் இருக்க வேண்டும் என்ற ஏகாதிபத்திய நாடுகளின் விருப்பத்தை உ.வ.க. ''டெர்பெஸ் படிவம்'' என்ற பெயரில் சுற்றுக்கு விட்டது.

ஏற்கெனவே தாராள இறக்குமதியால் தடுமாறிக் கொண்டிருக்கும் ஏழை நாடுகளின் தொழிற்துறையை, சுத்தமாக துடைத்து மூடிவிடும் சதித் திட்டம் தான் டெர்பெஸ் படிவம். இந்தியா போன்ற ஏழை நாடுகளில் நேரடிக் காலனி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, ஏகாதிபத்திய நாடுகளின் குப்பைத் தொட்டியாக அந்நாடுகள் இருந்ததைப் போன்ற நிலையை மீண்டும் உருவாக்கும் முயற்சிதான் இந்த டெர்பெஸ் படிவம்.

கான்கன் மாநாட்டின்பொழுது ஏழை நாடுகளின் கடும் எதிர்ப்புக்குள்ளான இந்த டெர்பெஸ் படிவம், ஜெனீவா மாநாட்டில் எவ்வித மாற்றமும் இன்றி நிறைவேற்றப்பட்டது. ''சில பொருட்களின் மீதான சுங்கத் தீர்வையைக் குறைக்க வேண்டியதில்லை; அவை எந்தப் பொருட்கள் என்பதைப் பின்னர் விவாதிக்கலாம்'' என்ற சலுகை மட்டும் ஏழை நாடுகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

முதலீடு, வர்த்தகப் போட்டி, வர்த்தக வரிகள், அரசாங்கக் கொள்முதல் என்ற நான்கு அம்சங்களை உ.வ.க.வில் சேர்க்க வேண்டும் என்ற ஐரோப்பியக் குழும நாடுகளின் கோரிக்கையை, ஏழை நாடுகள் நீண்டகாலமாகவே எதிர்த்து வருகின்றன. ஜெனிவா பேச்சுவார்த்தையின் பொழுது, ''இதில் மூன்று அம்சங்களை விலக்கிக் கொள்கிறோம்'' என ஐரோப்பியக் குழுமம் காட்டிய சலுகையை அடுத்து, வர்த்தக வரிகள் என்ற அம்சம் மட்டும் ஜூலை ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு நாடுகளில் இயங்கி வரும் பன்னாட்டு நிறுவனங்களின் துணை நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும்பொழுது, அதன்மீது புதிதாக வரி விதிக்கக் கூடாது என்ற ஏகாதிபத்தியங்களின் விருப்பம் இதன் மூலம் நிறைவேறப் போகிறது. அதாவது, பன்னாட்டு நிறுவனங்கள், தங்களின் துணை நிறுவனங்களின் மூலம் நடத்தி வந்த வரி ஏய்ப்புகள், இனி சட்டபூர்வமாகிவிடும்.

உ.வ.க.வில், பல்வேறு முகாம்களாகச் செயல்பட்டு வரும் ஏழை நாடுகளை, ஒன்றுக்கு எதிராக மற்றொன்றை நிறுத்தியதன் மூலமும்; இந்தியாவையும், பிரேசிலையும் விலைக்கு வாங்கியதன் மூலமும் கான்கன் மாநாட்டில் சாதிக்க முடியாததை ஜெனிவா மாநாட்டின் பொழுது ஏகாதிபத்திய நாடுகள் சாதித்துக் கொண்டன. குறிப்பாக கான்கன் மாநாடு நடந்தபொழுது, உலகெங்கிலும் காணப்பட்ட எதிர்ப்பு, இப்பொழுது இல்லாமல் போனது, ஏகாதிபத்திய நாடுகளுக்கும், இந்தியா, பிரேசில் நாடுகளின் தரகு அதிகார வர்க்கக் கும்பலுக்கும் சாதகமாக அமைந்தது.

ஏகாதிபத்திய நாடுகளோடு சரிசமமாக உட்கார்ந்து கொண்டு ஜூலை ஒப்பந்தத்தை விவாதிக்கும் தகுதியை உ.வ.க., இந்தியாவிற்கு வழங்கியவுடனேயே, இந்தியா கான்கன் மாநாட்டில் காட்டிய போலித்தனமான எதிர்ப்பைக் கூட மூட்டைக் கட்டி விட்டது. ''ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து விவசாய விளைபொருட்கள் தாராளமாக இறக்குமதியாவதற்கு வரம்பு விதிக்க வேண்டும்; அமெரிக்க பருத்தி விவசாயத்திற்கு வழங்கப்படும் மானியத்தைக் குறைக்க வேண்டும்'' என மிகவும் வறிய ஆப்பிரிக்க நாடுகள் கோரியதை, ஏகாதிபத்திய நாடுகளைப் போலவே இந்தியாவும் ஒதுக்கித் தள்ளியது. மாறாக, விவசாயம் தொடர்பாக ஏகாதிபத்திய நாடுகள் தந்த வெற்று வாக்குறுதியைக் காட்டி, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடும்படி, பிற ஏழை நாடுகளுக்குத் தூண்டில் போட்டது. இந்தியா தூக்கிக் கொண்டாடும் இந்த 'வெற்றி', உமி கொண்டு வந்தவன் அவல் தின்ற கதையைப் போன்றது என்பதை ஏழை நாட்டு மக்கள் விரைவிலேயே புரிந்து கொள்வார்கள்; இந்திய ஆளுங் கும்பலின் முகத்தில் காறி உமிழ்வார்கள்.

● செல்வம்


படிப்பகம்

www.padippakam.com



# பாலஸ்தீனம்:

# இசுரேலின் இன அழிப்புப் போர்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், இசுரேலுக்கும் இடையே 1993-ஆம் ஆண்டு கையெழுத்தான ஆஸ்லோ ஒப்பந்தத்தின்படி காசா முனை, பாலஸ்தீனர்களின் சுயாட்சி நடைபெற வேண்டிய பகுதியாகும். ஆனால், ''உலகிலேயே மிகப் பெரிய திறந்தவெளி சிறைச்சாலை ஒன்று இருக்குமானால், அது காசா முனையாகத்தான் இருக்க முடியும்'' என்கிறார் அமைதி இயக்கத்தைச் சேர்ந்த நேதா கோலன்.

இசுரேலின் மேற்கே மத்திய தரைக் கடலையும், எகிப்தையும் ஒட்டி அமைந்துள்ள 360 ச.கி.மீ. பரப்பளவே கொண்ட ஒரு துண்டு நிலம்தான் காசா முனை. இதில் ஏற்கனவே 42 சதவீத நிலப்பரப்பை (150 ச.கி.மீ. பரப்பளவை) இசுரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் நேரடியாகக் கைப்பற்றிக் கொண்டு விட்டனர். ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் கட்டப்பட்டுள்ள யூதக் குடியிருப்புகளில், இசுரேலைச் சேர்ந்த 4,000 யூதர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 58 சதவீத நிலப்பிரப்பில், 13 இலட்சம் பாலஸ்தீனர்கள், சிறைச்சாலைகளில் கைதிகள் அளவுக்கு அதிகமாக அடைக்கப்படுவதைப் போல, அகதிகளாக, இசுரேலிய இராணுவக் கண்காணிப்பு - கட்டுப்பாட்டின் கீழ், திணிக்கப்பட்டுள்ளனர்.


காசா முனையில் இருக்கும் வளமான நிலங்கள், நீர்வள ஆதாரங்கள் அனைத்தும் இசுரேலின் யூதமதவெறி பாசிச கும்பலால், பாலஸ்தீனர்களிடமிருந்து பறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு காலனிய அரசின் கீழ் வாழும் குடிமகனுக்குக் கிடைக்க வேண்டிய சமூக - பொருளாதார உரிமைகள் கூட பாலஸ்தீனர்களுக்கு மறுக்கப்படுகிறது. இவ்வளவு ஏன், காசா முனையில் இசுரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் வாழும் பாலஸ்தீனர்களுக்கு, சுதந்திரமாக நடமாடும் உரிமை கூட கிடையாது.

சிறைச்சாலைகளில் கைதிகள் தனித் தனிக் கண்டங்களில் அடைக்கப்பட்டிருப்பதைப் போல, காசா முனையில் பாலஸ்தீனர்கள் வாழும் பகுதிகள், அகதி முகாம்கள், நான்கு திட்டுக்களாகச் சிதறிக் கிடக்கின்றன. இந்த நான்கு திட்டுக்களிடையே, யூதக் குடியிருப்புகளை உருவாக்கி, அதன் மூலம் காசா முனையின் ஒரு பகுதியில் வாழும் பாலஸ்தீனர்கள், இன்னொரு பகுதியில் வாழும் பாலஸ்தீனர்களிடையே எளிதாகத் தொடர்பு கொள்ள முடியாதபடி பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்லோ ஒப்பந்தப்படி பாலஸ்தீன சுயாட்சி நடைபெற வேண்டிய மேற்குக் கரையின் நிலையும் ஏறத்தாழ காசா முனையைப் போன்றதுதான்: யூதக் குடியேற்றங்கள், இசுரேல் இராணுவப் பாதுகாப்பு வளையங்கள் என்ற பெயரில் மேற்குக் கரையின் 40 சதவீத நிலப்பரப்பை இசுரேல் ஏற்கெனவே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. மீதமுள்ள பகுதியில்தான், அதுவும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத நான்கு தனித்தனி திட்டுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ள பகுதிகளில்தான், இருபது இலட்சம் பாலஸ்தீன மக்கள் வாழ்கின்றனர்.

இசுரேலின் மேற்கே அமைந்துள்ள காசா முனையிலும், கிழக்கே அமைந்துள்ள மேற்குக் கரையிலும் உள்ள யூதக் குடியிருப்புகளை இணைப்பதற்குப் போடப்பட்டுள்ள நெடுஞ்சாலைகளைப் பாலஸ்தீன மக்கள் பயன்படுத்த முடியாது. நம் நாட்டு கிராமங்களில் மேல்சாதிக்காரர்களுக்குத் தனிக் கிணறு; தாழ்த்தப்பட்டோருக்குத் தனி கிணறு என்றிருப்பதைப் போல, குடியேறியுள்ள யூதர்களுக்கு குடிநீர் விநியோகம் தனி; பாலஸ்தீன மக்களுக்குத் தனி; மின்சாரம், எரிபொருள் விநியோகம் உள்ளிட்டு எல்லாமே தனித்தனி; இவ்வளவு ஏன், ஒரு கார் யூதனுக்குச் சொந்தமானதா, இல்லை பாலஸ்தீனனுக்குச் சொந்தமானதா என்பதை அந்த காரின் பதிவு எண் பலகையின் நிறத்தை வைத்து - யூதர்களுக்கு ஆரஞ்சு நிறப் பலகை, பாலஸ்தீனர்களுக்கு பச்சை நிறப்பலகை - கண்டு பிடித்துவிட

**மேற்குக் கரைப் பகுதியில் இசுரேலிய குடியுரிமை பெற்ற அரேபியர்கள் வாழும் பக்கா - அல் - கார்பியா கிராமத்தையும் (இடது) பாலஸ்தீனர்கள் வசிக்கும் நஸ்லத் இஸ்ஸா கிராமத்தையும் பிரிக்கும் தடுப்புச் சுவர்.**





படிப்பகம்

www.padippakam.com

முடியும் எனுமளவுக்கு இனவெறி பாகுபாடு தலைவிரித்தாடுகிறது.

காசா முனையிலும், மேற்குக் கரையிலும் வாழும் பாலஸ்தீன மக்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் அப்பகுதி நெடுகிலும் 482 சோதனைச் சாவடிகளும், மின்சார வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன. பாலஸ்தீனர்களிடம் அடையாள அட்டை இருந்தால்கூட, சோதனைச் சாவடியைக் கடந்து செல்வது என்பது அவ்வளவு எளிதானதல்ல.


மேற்குக் கரையில் உள்ள ரமல்லா நகரத்தில் வேலை பார்க்கும் ஒரு பாலஸ்தீன தையல் கலைஞர், ''ரமல்லாவில் இருந்து 11 கி.மீ. தூரத்தில் உள்ள எனது வீட்டிற்கு, காரிலோ, பேருந்திலோ போனால், 15 நிமிடம் தான் ஆகும். ஆனால், இடையில் உள்ள ஸுத்ரா சோதனைச் சாவடியைக் கடந்து போவதற்கு மட்டும் 3 மணி நேரம் ஆகும். ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போய்விட்டு வீட்டிற்கு திரும்புவது என்றால், தினமும் ஆறு மணி நேரம் சோதனைச் சாவடியிலேயே காத்துக் கிடக்க வேண்டும். இதனால், நான் வாரம் ஒருமுறை தான் வீட்டிற்குப் போய் வருகிறேன்'' என்று கூறுகிறார்.

ஜெனின் நகரத்தில் உள்ள தாய் - சேய் நல விடுதியில் பணியாற்றும் பாலஸ்தீன மருந்தாளுநர், ''சோதனைச் சாவடி கெடுபிடிகளால், மருத்துவமனைக்குத் தேவைப்படும் மருந்துகள், கதிரியக்கக் கருவிகளைக் கூட நாங்கள் பெற முடியவில்லை'' என்கிறார். உயிரற்ற மருந்துப் பொருட்களும், கருவிகளும் சோதனைச் சாவடியைக் கடப்பதே குதிரைக் கொம்பென்றால் உயிரும், உணர்வு மிக்க பாலஸ்தீன மக்கள் சோதனைச் சாவடியைக் கடப்பதற்குள் அனுபவிக்கும் துயரங்களையும், அவமானங்களையும் சொல்லி மாள முடியாது.

பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரத்தின் படி, ''செப். 2000-க்கும் சனவரி 2003-க்கும் இடைப்பட்ட இரண்டரை ஆண்டுகளில், சோதனைச் சாவடியைக் கடந்து பள்ளிக்குச் சென்று திரும்பும் சிறுவர்களில், 239 சிறுவர்கள் இசுரேலிய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்; 2,500-க்கும் மேற்பட்ட சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.''

''சோதனைச் சாவடிகளில் கால் கடுக்க நிற்கும்பொழுதே, 52 கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரசவ வலி ஏற்பட்டு, வெட்டவெளியில் பிரசவம் நடந்துள்ளது; இதில் 17 சிசுக்கள், மருத்துவ வசதி கிடைக்காததால், பிறந்தவுடனேயே இறந்து விட்டன.''

''உயிருக்குப் போராடும் நோயாளிகள் கூட, சோதனைச் சாவடியை உடனே கடந்து விட முடியாது; இந்தக் கெடுபிடிகளாலேயே 82 நோயாளிகள் சோதனைச் சாவடியைக் கடக்கும் முன்பே, இறந்துவிட்டனர்.''



**சோதனைச் சாவடியில் துப்பாக்கி முனையில் நடக்கும் அடையாளப் பரிசோதனை.**

சோதனைச் சாவடி என்பது பாலஸ்தீனர்களைப் பொறுத்தவரை வெட்டவெளி சித்திரவதை முகாம்; பாலஸ்தீன மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும்; மேற்குக் கரையையும், காசா முனையையும் இரண்டு கூறாகப் பிரிக்கவும் இந்தச் சோதனைச் சாவடிகள் கூட போதாது என முடிவெடுத்துள்ள இசுரேலிய இனவெறி அரசு, மேற்குக் கரையையும், காசா முனையையும் நிரந்தரமாகக் கூறுபோடும் வண்ணம், ஏறத்தாழ 700 கி.மீ. நீளமுள்ள, பெர்லின் சுவரைப் போன்ற ஒரு தடுப்புச் சுவரை மேற்குக் கரையின் எல்லையில் கட்டி வருகிறது. ஏறத்தாழ 200 கி.மீ. தொலைவிற்குக் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்தச் சுவர், ''மனித உரிமைகளுக்கு எதிரானது; கட்டிய சுவரை இடிக்க வேண்டும்; இந்தச் சுவற்றினால் தங்களின் நிலத்தை இழந்துவிட்ட பாலஸ்தீனர்களுக்கு இசுரேல் நட்ட ஈடு வழங்க வேண்டும்'' என சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஐ.நா.வின் தீர்மானங்களையே மதிக்காத இசுரேல் இனவெறி அரசு, இந்தத் தீர்ப்புக்கா பணிந்துவிடும்?

இதுவரை கட்டப்பட்டுள்ள இந்தத் தடுப்புச் சுவற்றினால், மேற்குக் கரையைச் சேர்ந்த ஏறத்தாழ 50,000 பாலஸ்தீனக் குடும்பங்கள் தங்களின் விளை நிலங்களை இழந்துவிட்டன. இத்தடுப்புச் சுவற்றைக் கட்டும் முதல் கட்டப் பணி நிறைவடையும் பொழுது, ஏறத்தாழ இரண்டு இலட்சம் பாலஸ்தீனர்களின் பிழைப்பில் மண் விழுந்து விடும் என எச்சரிக்கிறது, உலக வங்கி.

இசுரேல் இராணுவம், கடந்த நான்கு ஆண்டுகளாக காசா முனை மீது நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போரின் முதல் இரண்டே ஆண்டுகளில், பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமான 36,69,000 ச.மீ. பரப்பளவுள்ள விளை நிலங்கள், பயிர் செய்வதற்குப் பயன்படுத்த முடியாதபடி இசுரேல் இராணுவத்தால் நாசப்படுத்தப்பட்டுள்ளது; 1,12,900 ஆலிவ் மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன.

பாலஸ்தீன விவசாயிகளிடமிருந்து விவசாய விளைபொருட்களை வாங்க மறுப்பது; அவர்களின் விளைபொருட்களை ஏற்றுமதி செய்ய மறுப்பது; காசா முனை, மேற்குக் கரையில் இருந்து இசுரேலுக்குள் வேலை செய்ய வரும் பாலஸ்தீனர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அனுமதிச் சீட்டை மறுப்பது - இப்பொருளாதாரத் தடைகளின் மூலம் பாலஸ்தீனர்களின் தேசியப் பொருளாதாரத்தைச் சிதைக்கவும்; அவர்களைப் பணிய வைக்கவும் முயலுகிறது, இசுரேல்.

●●●

**பா**லஸ்தீன பிரச்சினை தொடர்பாக ஐ.நா. மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பல்வேறு தீர்மானங்களின்படியும்; ஆஸ்லோ ஒப்பந்தப்படியும் மேற்குக் கரையும், காசா முனையும் பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமானது; அப்பகுதிகளில் இருந்து இசுரேலிய இராணுவமும்; சட்ட விரோதமாகக் குடியேற்றப்பட்டுள்ள யூதர்களும் வெளியேறி விட வேண்டும்.

இத்தீர்மானங்களின்படி கூட, பாலஸ்தீனர்களுக்குச் சொந்தமான



படிப்பகம்

மண்ணில், வெறும் 22 சதவீதம்தான் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்கும். ஆனால், அமெரிக்காவும், இசுரேலும் ''காசா முனையிலும், மேற்குக் கரையிலும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை இசுரேலே எடுத்துக் கொள்வது; 22 சதவீதத்துக்குப் பதிலாக, மேற்குக் கரை - காசா முனை பகுதிகளில் ஒரு 10 சதவீதம் நிலபரப்பை - தொடர்ச்சியோ, அண்டை நாட்டு எல்லைகளோ இல்லாமல், இசுரேலால் சுற்றி வளைக்கப்பட்ட நிலப்பரப்பை பாலஸ்தீனர்களுக்குக் கொடுப்பது எனத் திட்டம் போடுகின்றன. எதிர்காலத்தில் கூட, இசுரேலுக்கு எதிரான, சுதந்திரமும், சுயாதிபத்தியமும் கொண்ட பாலஸ்தீன நாடும், அரசும் உருவாகிவிடக் கூடாது என்பது தான் அமெரிக்காவின் மேற்காசிய அமைதித் திட்டம்.

ஐ.நா. மன்றத்தின் பொது கவுன்சிலில், ''இசுரேல் கட்டி வரும் தடுப்புச் சுவரை இடிக்க வேண்டும்'' எனக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தையும், தடுப்புச்சுவருக்கு எதிராக உலக நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் அமெரிக்கா எதிர்த்து வருவதன் பின்னே இருப்பது ''அகண்ட இசுரேல்'' என்ற யூத மதவெறிக் கனவுதான்.

கடந்த ஏப்ரல் மாதம் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கும்; இசுரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையின் முடிவில், ''மேற்குக் கரையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள யூதக் குடியேற்றங்களை அமெரிக்கா அங்கீகரித்திருப்பதோடு, ஜோர்டான் உள்ளிட்டு பல் வேறு நாடுகளில் அகதிகளாக வாழும் பாலஸ்தீனர்கள், மீண்டும் தங்களின் சொந்த நாட்டுக்குத் திரும்பக் கோரும் உரிமையை ஏற்றுக் கொள்ள முடியாது'' என்றும் அறிவித்து விட்டது. ''அகண்ட இசுரேல்'' என்ற வார்த்தையைத் தவிர்த்துவிட்டு, யூத மதவெறிக் கும்பலின் கனவைத்தான் ஏப்ரல் அறிக்கையாக வெளியிட்டுள்ளது, அமெரிக்கா.

அகண்ட இசுரேல்; அதை ஏற்றுக் கொள்ளும் தலையாட்டி பாலஸ்தீன நிர்வாகம்; இதற்குக் கடுகளவும் எதிர்ப்புக் காட்டாத அண்டை அரபு நாடுகள்; இதன் மூலம் மேற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்துவது என்பதுதான் அமெரிக்காவின் திட்டம்.

ஏகாதிபத்திய மேலாதிக்க வெறியும், யூத இனவெறியும் கொண்ட அமெரிக்க சித்தாந்தவாதிகளால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட ''புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்'' என்ற அறிக்கையிலேயே மேற்காசிய நாடுகளின் எல்லைகளையும், அரசுகளையும் அமெரிக்காவின் நலன்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் எனப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் முக்கியப் பங்காற்றிய டிக் செய்னிதான் இன்று அமெரிக்காவின் துணை குடியரசுத்தலைவர்; டொனால்ட் ரம்ஸ்ஃபெல்டு, இராணுவ அமைச்சர்; லோல்ஃபாலிட்ஸ் துணை இராணுவ அமைச்சர்; லீவில் லிப்பி, துணை குடியரசுத் தலைவரின் செயலாளர்.



அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு கனன்று வீசும் காசா முனையில், அமெரிக்கக் கொடியை எரித்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் பாலஸ்தீன இளைஞன்.

''புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டத்தை'' எப்படி நடைமுறைப் படுத்துவது எனக் காத்துக் கொண்டிருந்த புஷ் நிர்வாகத்திற்கு, செப். 11, 2001 அன்று அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பொன்னான வாய்ப்பை வழங்கியது. இத்தாக்குதலையடுத்து, ''தீவிரவாதத்துக்கு எதிரான போரை'' அறிவித்தார் புஷ்.

அமெரிக்கா அறிவித்து நடத்தி வரும் இப்போரில், ஈராக்கில் சதாம் ஆட்சி தூக்கியெறியப்பட்டு, அமெரிக்க பொம்மையாட்சி கொண்டு வரப்பட்டது. அராபத்தை, ''நமது பின்லேடன்'' எனக் குற்றஞ்சாட்டிய இசுரேல், பாலஸ்தீனர்களின் மீதான ஆக்கிரமிப்புப் போரைத் தீவிரப்படுத்தியது. அராபத்தின் தலைமையில் உருவாக்கப்பட்டிருந்த பாலஸ்தீன நிர்வாகம், அமெரிக்காவின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது.

இசுரேல் யூத மதவெறி அரசை எதிர்த்துப் போராடி வரும் ஹெஸ்புல்லா, ஹமாஸ் ஆகிய போராளிக் குழுக்களுக்கு உதவுவதால், சிரியாவும், ஈரானும் அமெரிக்காவால் எச்சரிக்கப்பட்டன.

சௌதி அரேபிய முசுலீம்களிடையே பரவி வரும் அமெரிக்க - இசுரேல் எதிர்ப்பை சௌதி மன்னர் குடும்பம் நசுக்கத் தவறினால், சௌதி அரேபியாவைக் கூட இரண்டாக உடைக்கலாம்; பல இலட்சக்கணக்கான பாலஸ்தீன அகதிகள் வாழும் ஜோர்டானில் புதிய பாலஸ்தீன அரசை உருவாக்கலாம் என்றெல்லாம் கூட மேற்காசியாவை மாற்றியமைப்பது பற்றித் திட்டங்களைப் போடுகிறது, அமெரிக்கா.

''புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்'' மேற்காசியாவை மாற்றியமைப்பதோடு மட்டும் நின்றுவிடாது. பிற நாடுகளிலும் வட்டாரங்களிலும் கூட தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் அமெரிக்கா மூக்கை நுழைக்கும். அதனால் தான், ''தீவிரவாதத்துக்கு'' எதிராக அமெரிக்கா நடத்தும் போரை, முடிவுறாத போர் என்கிறார் ஜார்ஜ் புஷ்.

இன்று பாலஸ்தீனத்திலும், ஈராக்கிலும் அமெரிக்காவை எதிர்த்து நடந்துவரும் போராட்டங்கள், அந்த நாட்டு மக்களின் சொந்தப் பிரச்சினை எனச் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. அப்போராட்டங்கள் அமெரிக்காவின் உலக மேலாதிக்கத் திட்டத்திற்கு எதிரானவை. பாலஸ்தீனத்திலும், ஈராக்கிலும் நடந்துவரும் இவ்விடுதலைப் போராட்டங்களை ஆதரித்து, உலகெங்கிலும் ஒவ்வொரு நாட்டிலும் உழைக்கும் மக்கள் அணிதிரட்டப்பட வேண்டும். அப்பொழுது மட்டுமே, ஏழை நாடுகள் அமெரிக்காவின் ஒற்றைத்துருவ மேலாதிக்கத்தில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியும்!

(முற்றும்)

● ரஹீம்

www.padippakam.com

## புரட்சிகர மணவிழா:

# தாலி மறுப்பு மணவிழாவில் தாலி அறுப்பு!

"புரட்சிகர கலாச்சாரம், பரந்துபட்ட மக்களின் ஒரு சக்திமிக்க புரட்சிகர ஆயுதமாகும். புரட்சி வெடித்தெழுவதற்கு முன், அது சித்தாந்த ரீதியில் புரட்சிக்கான தளத்தைத் தயார் செய்கிறது" என்றார் தோழர் மாவோ. அறியாமையிலும் மூடநம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடக்கும் பின்தங்கிய நிலையிலுள்ள கிராமப்புற விவசாயிகளைப் புரட்சிகர கலாச்சாரத்தில் பயிற்றுவித்து வளர்ப்பதென்பது மிகவும் இடர்ப்பாடுகள் நிறைந்த பணி. அதை உவப்புடன் ஏற்று, பார்ப்பனப் பண்பாட்டுக்கு எதிரான ஓர் போராட்டமாக புரட்சிகர மணவிழாக்களை நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் நடத்தி வருகின்றன.



பென்னாகரத்தில் நடந்த தாலி மறுப்பு புரட்சிகர மணவிழாவில்,
தாலியைக் கழட்டி புரட்சிகரப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் தோழர்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி, கடந்த ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் பார்ப்பன இந்து பண்பாட்டை மறுதலித்து இரு புரட்சிகர மணவிழாக்களை நடத்தியது. இவ்விரு விழாக்களிலும் 4 தோழர்கள், சாதிய ஆணாதிக்க அடையாளச் சின்னமான தாலியை அறுத்தெறிந்து, புரட்சிகர பண்பாட்டை உயர்த்திப் பிடித்தனர்.

தோழர் ஆம்பள்ளி முனிராஜ் தலைமையில் 29.8.04 அன்று பென்னாகரத்தில் நடந்த தோழர்கள் சங்கர் - சங்கீதா புரட்சிகர மணவிழாவில், கரியம்பட்டியைச் சேர்ந்த தோழர்கள் சின்னதுரை - பேபி, கள்ளிபுரத்தைச் சேர்ந்த தோழர்கள் குவில்-கனகா ஆகிய இரு தம்பதிகளும் அடிமைச் சின்னமான தாலியை அறுத்தெறிந்தனர்.

தோழர் சிவகாமு தலைமையில் 12.9.04 அன்று பென்னாகரத்தில் நடந்த தோழர்கள் அருண்-வசந்தி புரட்சிகர மணவிழாவில், ஏழாவது மைல் கிராமத்தைச் சேர்ந்த தோழர்கள் மாது-சின்னப்பிள்ளை, தோழர்கள் சின்னராஜ்-மாலா ஆகிய இரு தம்பதிகளும் அடிமைச் சின்னமான தாலியை அறுத்தெறிந்தனர்.

இத்தம்பதிகள், முன்பு தாங்கள் அறியாமையினால் தாலி அணிந்திருந்ததையும் அது எவ்வாறு அடிமைச் சின்னமாக உள்ளது என்பதையும் விளக்கினர். "தாலி கட்டித் திருமணம் செய்யும்போது முப்பத்து முக்கோடி தேவர்களும் கடவுள்களும் வாழ்த்தி ஆசீர்வதிப்பதாக பெரியவர்கள் கூறுகிறார்கள். ஆனால், எங்களுக்குப் பிரச்சிகைனள் - கஷ்டங்கள் வரும்போது எந்தக் கடவுளோ, தேவனோ, பார்ப்பானோ எட்டிப் பார்க்கவில்லை. எங்களது பிரச்சினைக்கு வி.வி.மு. தோழர்கள்தான் வழிகாட்டி உதவுகிறார்கள். உண்மை இப்படியிருக்க, இல்லாத கடவுளையும் வேண்டாத மூட நம்பிக்கைகளையும் அவமானச் சின்னங்களையும் நாங்கள் ஏன் சுமக்க வேண்டும்? அதனால் தான் இந்தத் தாலியை அறுத்தெறிகிறோம்" என்று உரையாற்றிய அவர்கள், "பார்ப்பனப் பண்பாட்டையும் பார்ப்பன பயங்கரவாதத்தையும் முறியடிக்க வி.வி.மு.வுடன் இணைந்து போராடுவோம்" என்று முழங்கினர். இத்தோழர்கள் தாலியை அறுத்தெறிந்தபோது, ஆயிரக்கணக்கில் திரண்ட தோழர்களும் உழைக்கும் மக்களும் ஆரவாரத்துடன் முழக்கமிட்டு வாழ்த்தி வரவேற்றனர்.

தாலி மறுப்பு புரட்சிகர மணவிழாவில் தாலி அறுப்பு நிகழ்ச்சி நடைபெறுவதை விளக்கி விரிவாக சுவரொட்டி ஒட்டப்பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதால், இவ்வட்டாரம் முழுவதும் இதுவே பரபரப்பான விசயமாகியது. எங்கு திரும்பினாலும் உழைக்கும் மக்களும் ஓட்டுக் கட்சியினரும் தாலி அணிய வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றியே விவாதிக்குமளவுக்கு இந்நிகழ்ச்சி பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தகைய புரட்சிகர மணவிழாக்களும் அடிமைச் சின்னமான தாலி அறுப்புகளும் வர்க்கப் போராட்டத்தோடு தொடரும்போது, இப்புரட்சிகர பண்பாடு பார்ப்பனியத்துக்கு எதிரான உழைக்கும் மக்களின் புரட்சிகர ஆயுதமாக சுழன்று வீசும் என்பதில் ஐயமில்லை.

**தகவல்: வி.வி.மு., பென்னாகரம்.**

---

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

**இருபதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகம் இதழுக்கு நேரிலும் கடிதங்கள் வாயிலாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள உங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்துவெறி பாசிசம், மறுகாலனியாதிக்கம் எனும் இருபெரும் அபாயம் நாட்டையும் மக்களையும் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில், உங்களது உறுதியான ஆதரவை அடித்தளமாகக் கொண்டு, பரந்துபட்ட உழைக்கும் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உறுதியேற்கிறோம்.**

**"கேள்வி-பதில்" பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கேள்விகள் தாமதமாகக் கிடைத்துள்ளதால், இவ்விதழில் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழிலிருந்து "கேள்வி-பதில்" பகுதி தொடர்ந்து வெளிவரும்.**

**அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சிநாள் வாழ்த்துக்கள்!**

**- ஆசிரியர் குழு.**

**Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.**

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05
www.padippakam.com



பத்திரிகை செய்தி:

# நக்சல்பாரி புரட்சிகர குழுக்களின் ஐக்கியத்தை வரவேற்போம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) மக்கள் யுத்தக் குழுவும் மாவோயிஸ்டு கம்யூனிஸ்ட் மையம் - (எம்.சி.சி.யும்) இணைந்து **இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்)** என்ற அமைப்பாக உருவாகியிருப்பது குறித்து அறிந்தோம். கம்யூனிஸ்டு புரட்சியாளர்களிடையேயான இந்த ஐக்கியத்தை வரவேற்கிறோம். சிதறிய சிறு குழுக்கள் என்று திருத்தல்வாதிகளும் ஆளும் வர்க்கங்களும் சிறுமைப்படுத்தி பிரச்சாரம் செய்து வந்ததற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த ஐக்கியம் அமைந்துள்ளதெனக் கருதுகிறோம்.

அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் பகிரங்கமான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும், உலகமயமாக்கல் என்ற பெயரிலான ஏகாதிபத்தியங்களின் மறுகாலனியாக்க நடவடிக்கைகளும், அதற்கு உகந்த வகையில் இந்தியாவில் தலையெடுத்து வரும் ஏகாதிபத்தியத்தின் அடியாள் படையான இந்துத்துவ பாசிசமும் பாட்டாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பியக்கத்தை அவசரத் தேவையாக்கியுள்ளன. குறிப்பாக, தெற்காசியப் பிராந்தியத்தின் மீது அமெரிக்கா தனது கவனத்தைக் குவித்துள்ள நிலையில் நேபாளப் புரட்சியாளர்களின் முன்னேற்றமும், தற்போது இந்த அமைப்புகளுடைய இந்த ஐக்கியமும் முக்கியத்துவம் பெறுகின்றன என்று கருதுகிறோம்.

மாநில அமைப்புக் கமிட்டி, இ.பொ.க. (மா-லெ) தமிழ் நாடு சார்பில் அவர்களது மையக்குழுவுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நக்சல்பாரி இயக்கம் சந்தித்த பின்னடைவுகளுக்கு அதன் அடிப்படை நிலைப்பாடுகளிலேயே உள்ள தவறுகள்தான் காரணம் என்று கூறி மீண்டும் வலது சந்தர்ப்பவாதத் தேர்தல் பாதைக்கு சில குழுக்கள் திரும்பியுள்ளன. ஆனால், நக்சல்பாரி இயக்கத்தின் அடிப்படை அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளில் ஊன்றி நின்ற இந்த அமைப்புகளிடையே இன்று தோன்றியுள்ள இந்த ஐக்கியம், நக்சல்பாரி எழுச்சியின் உண்மையான உணர்வை மீண்டும் தட்டியெழுப்பியுள்ளது.

இந்த அமைப்புகளுடைய வெற்றிகரமான இந்த முயற்சியைப் பாராட்டுகின்ற அதேநேரத்தில், உண்மையான கம்யூனிஸ்டு உணர்வில் எமது கருத்துக்களை அவர்களிடம் முன்வைக்க விழைகிறோம்.

வடதெலிங்கானா, தண்டகாரண்யா, பீகாரின் ஆயுதப் போராட்ட நடைமுறை இந்தியாவில் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தாது என்பதை அவர்களது சொந்த அனுபவமே மீண்டும் மீண்டும் நிரூபிப்பதை அங்கீகரிப்பார்கள் என நம்புகிறோம். ஆகவே, புரட்சிகர அமைப்பென அங்கீகரிப்பதற்கும் ஐக்கியப்படுவதற்கும் வடதெலிங்கானா, தண்டகாரண்யா, பீகார் பாணியிலான ஆயுதப் போராட்டத்தை உடனே தொடங்கி நடத்துவதையும் அதில் ஊன்றி நிற்பதையுமே அடிப்படை அளவுகோலாக வைக்கும் அவர்களது பார்வையையும் மறுபரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்கள் என நம்புகிறோம்.

நாட்டின் மற்ற பகுதிகளில் ஆயுதப் போராட்டத்தைக் கட்டியமைப்பதற்கு அவர்கள் பலமுறை மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றது குறித்தும், தேசிய - சர்வதேசிய நிலைமைகள் குறித்து அவர்களது ஆய்வில் உள்ள தவறுகள் குறித்தும் சுட்டிக் காட்டுவதும் அவசியம் எனக் கருதுகிறோம். ஏகாதிபத்திய முகாமும் இந்திய ஆளும் வர்க்கங்களும் மேலும் மேலும் தீவிரமான மீளமுடியாத அரசியல் - பொருளாதார நெருக்கடிகளில் ஆழ்ந்து வருகிறார்கள் என்பதும், அந்த நெருக்கடியின் சுமையை மக்கள்மீது திணிக்கிறார்கள் என்பதும் உண்மைதான். இதன் விளைவாக, மக்கள் மத்தியில் ஏற்படும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் புரட்சிகர அரசியல் உணர்வு என்றும், ஆயுதப் போராட்டத்திற்கான அவர்களது அங்கீகாரமாகவும், தயார் நிலையாகவும் அவர்கள் கருதிக் கொள்கிறார்கள். முதலாளித்துவ அரசியல் கட்சிகள்பால் மக்கள் கொண்டுள்ள அவநம்பிக்கை என்பதையே மக்களின் புரட்சிகர உணர்வு எனத் தவறாகப் புரிந்து கொள்வது அகநிலைவாதமாகும்.

அரசியல் போர்த்தந்திரம் செயல்தந்திரத்தின் அடிப்படையில் மக்களைத் திரட்டி அவர்களது சொந்த வர்க்கப் போராட்ட அனுபவத்தினூடாகத்தான் அவர்களது அரசியல் உணர்வை உயர்த்த முடியுமெனக் கருதுகிறோம். இதனூடாகத்தான் ஆயுதப் போராட்டத்தைக் கட்டமைக்க இயலும். இது குறித்து சிந்திக்கக் கோருகிறோம்.

இந்த ஐக்கியம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உண்மைதான். எனினும், இந்த ஐக்கியத்தின் விளைவாக இந்தியப் புரட்சியாளர்கள் அனைவரது ஐக்கியமும் முழுமையடைந்து விட்டது என்று கருதமாட்டார்கள் என நம்புகிறோம்.

இரண்டு புரட்சிகர அமைப்புகளின் இந்த ஐக்கியம், எல்லா புரட்சிகர சக்திகளையும் ஒன்றுபடுத்தி ஒரு உண்மையான நாடு தழுவிய புரட்சிகர இயக்கத்தைக் கட்டமைப்பதை நோக்கி முன்னேற வேண்டும் என்று விழைகிறோம்.

தோழமையுடன்,
*மாநில அமைப்புக் கமிட்டி,*
*இந்தியப் பொதுவுடைமைக் கட்சி,*
*(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்),*
*தமிழ்நாடு.*

21.10.04